பெருமாளையங்கார் (வெ)

[illegible]

[illegible]

ஸ்ரீரங்கம். 1911

~~1749834~~

DIGITIZED

022:38.21195
N11
119880

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருக்கூடல் நகரமென்னுந் திவ்யதேசத்தி
லெழுந்தருளியிருக்கிற

## மதுரை வ்யூக சுந்தரராஜன்

# ஸ்தலபுராணசங்கிரகம்

இது

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த விழுப்பகலூர்

பெருமாள் சுந்தரராஜய்யங்கார்

குமாரனும்

கோயிற்கந்தாடையண்ணன் திருவடிசம்மந்தனுமான

வேங்கடதாசனென்கின்ற

**பெருமாளையங்கார்**

இயற்றியது.

மதுரை

ஸ்ரீ ருக்மணி விலாஸம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

**1911.**

இதன் விலை] [அணா 0—3—0

47
47
11-1911
27.8.83

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட

மாதம் 1983 வருடம்

செப்பனிட்டு முடித்த

மாதம் 1984 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
5 - APR 1911
MADRAS.


## சூசிபத்திரம்.


| தொடர்ச்சிஎண் | விஷயம். | பக்க எண். |
|---|---|---|
| 1 | சாற்றுக்கவிகள் | 1 |
| 2 | அவதாரிகை. | 6 |
| 3 | காப்புகள் | 9 |
| 4 | அவையடக்கம் | 10 |
| 5 | வரலாற்றுச்சருக்கம் | 11 |
| 6 | நாடு நகரச் சருக்கம் | 14 |
| 7 | சங்கரன் தவமனம்புரிச் சருக்கம் | 15 |
| 8 | க்ஷேத்திரதீர்த்த மகிமைச் சருக்கம் | 21 |
| 9 | பிருதுசக்கரவர்த்தி முத்திபெற்றசருக்கம் | 23 |
| 10 | காலநேமிவதைச் சருக்கம் | 25 |
| 11 | வாசுணத்திரிச் சருக்கம் | 27 |
| 12 | அம்பரீடச்சருக்கம் | 28 |
| 13 | புரூரவச்சக்கரவர்த்திச் சருக்கம் | 33 |
| 14 | சந்திரகுலவராசாகுலிச் சருக்கம் | 38 |
| 15 | தத்துவநிர்ணயச் சருக்கம் | 43 |
| 16 | விஷ்ணுசித்தன் கிழிகொண்டசருக்கம் | 54 |
| 17 | மங்களச்சருக்கம் | 62 |
| 18 | பிழை திருத்தம். | 68 |

# விளம்பரம்.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பதியாதெனில்,

மதுரை வ்யூக சுந்தரராஜனென்கின்ற கூடலழகர் ஸ்தல புராணமாகிய இந்தப்புஸ்தகம் 0—3—0

ஸ்ரீவிஷ்ணு த்வாதசநாமமாலை-ஸ்ரீராமலிங்கராஜஸ்டான மங்கள சரித்திரமுதலியவை அடங்கிய புஸ்தகம் 0—2—0

தெலுங்கிலிருக்கிற தியாகராஜகிருதிகளுக்கு அக்ஷரந் வர்ணமெட்டுகளுடன் தமிழில் ஏற்படுத்திய கீர்த்தனப்புஸ்தகம் 0—[illegible]—0

பாகவத தசமஸ்கந்தத்துடன் ஸ்ரீராமபட்டாபிஷேகம் அடங்கிய புஸ்தகம் 0—2—0

ஸ்ரீ மதுரைவல்லி ஆண்டாள் விஷயமாக இயற்றிய வசந்தக பந்து கப்பல் சோபனம் ஓடம் லாலி முதலியவை அடங்கிய புஸ்தகம் 0—2—0

திருக்கோதையந்தாதி புஸ்தகம் 0—1—0

இவைகளில் அனேக பக்திசார விஷயங்களடங்கியிருப்பதாலும் அவைகளை யுணர்பவர்களுக்கு புகழுத பக்தியும், இகபரசுகமும் முண்டாகக் கூடியதாயிருப்பதாலும் விருப்பமுள்ளவர்கள அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதி தருவித்துக் கொள்ளலாம். தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

ஒரேதடவையில் ஒரேதினுசில் 10 புஸ்தகம் வாங்குகிறவர்களுக்கு ஒரு புஸ்தகம் இனாம் கொடுக்கப்படும்.


கோபாலகிருஷ்ண பிள்ளை.
ஸ்ரீ ருக்மணி விலாச அச்சுக்கூடம்.
மதுரை.

5/13
294:535

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ

ஹரி:ஓம்.

REGISTERED 5 APR 1911 MADRAS



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## கூடலழகர் ஸ்தலபுராணம்.

### சாற்றுக்கவிகள்.

சேது ஸமஸ்தான வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்களியற்றியது.

திருமாலழகர் இருக்கின்றகூட
லொருமான்மியத்தன் னுரைத்தான்—பெருமாள்
னைவிழுப்பனூரி லிசையுடனே தோன்றும்
மனவிழுப்ப வேதியர் செல்வன்.

மதுரைத்தமிழ்ச்சங்க வித்வான் இராமநாதபுரம் மகா-ள-ள-ஸ்ரீ அரங்கசாமி அய்யங்காரவர்களியற்றியது.

செய்யவள்வாழ்மார்பன் றிருக்கூடல் மான்மியத்தை
வையகத்தோர் தேர்ந்துமகிழ்வெய்தத்—துய்யசுவை
மன்னுதமிழ்ப்பாவால் வகுத்தான் விழுப்பநல்லூர்
தன்னில் வருவேங்கடதாசன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஹிந்து ஹைஸ்கூல் தமிழ் முன்ஷி மகா-ள-ள-ஸ்ரீ அப்புவையங்காரவர்களியற்றியது.

சீராருங்கல்வியறி வொழுக்கமெலா மோருருவாத் திகழ்ந்தாலன்ன
பேராரும் விழுப்பநல்லூர் வாழ்பெருமாளய்யங்கா ரெவரும்போற்ற

காராருங்கூடல்வண்ணனெங்கண்ணன்மலர்க்கழலிணையிற்கசிந்தன்பூறிப்
போராருமணிமாடக் கூடல்மான்மியந்தமிழாற் பேசினனே.

அனுமந்தன்பட்டி மஹாகவி மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களியற்றியது.

முறைவிடுத்த முழுமகர் கன்முடிசாய்த்து முயற்கறைய முதாவெண்டிங்கட்
இறைவிடுத்துப் புரந்தருளுந் திறலாழி யெம்பெருமான் றிறைஞ்சும் ஞாலம்
குறைவிடுத்துப் பெரியாய்வான் கொண்டெலெனக் கருங்கொண்டலுளங் கொண்டுமேவ
நறைவிடுத்த பூஞ்சோலைத் தென்மதுரை புரையொருவர் நவிலற்பாற்றே.

அத்தகைய திருக்கூடல்நகர் மான்மியநன் காய்ந்துதேறிப்
புத்தமுதமெனத்தமிழாற் புனைந்துயர் நாற்பொருட்பயனும் பொருந்தப்பெற்றான்
தத்தையொடு குயினிறைந்த தடஞ்சோலை விழுப்பநகர்ச் சதுரன் சான்ற
முத்தமிழின் முதுநெறிதேர் பெருமாளென் றுயர்மறையோன் முதல்வன்மாதோ.

கூடலழகர் தேவஸ்தானம் அத்தியயனபட்டரும், 2-ம் தீர்த்தக்காரருமாகிய பரம்பக்குடி ஸ்ரீ உ. வே. ஸ. கோபாலதேசிகாசாரியர் இயற்றியது.

நேரிசை யாசிரியப்பா.

திருவளர் செங்கே ழுருவளர் சோதிக்
கோடிசூ ரியர்கள் கூடி யுற்றென்னப்
பன்மணி யிமைக்கு நன்மணி விமான
வீரமிகு கோயிற் பரம பதத்திற்



பாயிருள் பருகு மாயிரம் பணமுடிப்
பாப்பின் மீது கோப்பெருந் தேவியாம்
பொன்னும் பூமியு மன்னு நீளையும்
பத்தியிற் பரவ நித்திய சூரிகள்
பல்லாண்டு கூறிப் பணிய வீற்றிருக்கு
மல்லாண்ட திண்டோள் மாதவ னெம்மான்
தன்னுறு சேவையை மன்மறை யனைத்து
மன்று காதலிற் கண்டு சேவிக்கத்
திருவுளம் பற்றிப் பெருவள முற்ற
நாடலி கடல்சூழ் பூமியிற் போந்து
செழுநீர்க் கழனியி னுழுதொழின் மள்ளர்தம்
மங்கையர் நடைக்கும் பங்கய மேவு
வன்ன நடைக்குந் தன்னமும் வேற்றுமை
யறியா தயர்க்கும் பொறியார் தெய்வப்
பாண்டிய நாட்டி னீண்டிய கடுவன்கள்
வானுற வோங்கிய தேனுறு மரங்களின்
மன்னுங் கிளைதொறுந் துன்னுங் கனிகளை
தாவிப் பறித்துத்த மாவியை நிகர்த்த
வூடிய மந்திக்கு நாடி முன்னூட்டித்
தாம்பின ருண்ணுந் தேம்பெறு கதலி
வனத்திற் கிருத மாலா நதியு
மனத்திற் றிகழு மணியுறு வையையு
மானத் துற்ற மணிகளின் காந்தியால்
வானத் துற்ற வளங்கெழு ரவியென
வல்லினு மலரு நல்லிதழ்த் தாமரைச்
சொனமுகித் தடமும் வனமிகு திண்டோட்
கணவர்க டம்மோ டிணங்கிய மாதர்
பிணங்கி யெறிந்த மணங்கெழு மாலையு
மணிபெறு மாரமு மணிதிகழ் முத்தமு
மலிந்து குப்பையாச் சுலவு பல்வீதி
யந்தரத் தளாவுஞ் சுந்தரக் கொடிசேர்
மாடங் களுஞ்சூழ் கூடலம் பதியில்

என்ன வட்டாங்கச் சொன்ன விமானத்து
ளாகூய வரத வத்தங்க ளோடு
பாகூர் இன்மொழிப் பதுமைபா மதுர
வல்லி யோடு தொல்புகழ் வியூக
சுந்தர ராசனென் றறுபெயர் துளங்க
வந்த ஞானர்க ளடிபணிஇ நிற்ப
விற்றிருந் தருளி நாற்றிசை வானரும்
பிருது முதலாக் கருது மரசரும்
நல்லவர் போற்றுசீ வல்லப தேவனும்
சனக முதல்வா மனக முனிவருந்
தத்துவ கேர்பர வத்து நிரணயம்
புரிந்தல களித்த பெரி யாழ்வாரு
மென்றிம் முதலோர் நன்று பூசிக்க
வேண்டிய வரமவர்க் கின்றியே கொடுத்து
முத்தியிற் சேர்த்த நத்துறு காதையை
மந்தர வாசமி மத்து நாளுற
வந்தரப் பாற்கட லகழிய தாழியாக்
கண்ணன் கடைந்து விண்ணவர்க் களித்த
வமிழ்தம் போலத் தமிழ்க்கடற் பரப்பிற்
றுணைவை நாட்டி மாதுறு பத்தியே
நாணுப் பூட்டிக் கோணு மனத்தொடுக்
கடைஇத் தெளிந்த நடையுறு கவிகளாப்
பாடி யுதவினன் மாடமா ளிகைசே
ரொழுக்கம் பரவு விழுப்ப நல்லூர்ச்
சுந்தர ராசத் தாயனும் வாரிதி
வந்தமா மதிபோல் வந்தங் குதித்தோன்
கனவிலு மற்றைய நனவிலு மாலடி
நினையு மன்பினன் நிகரிலாச் சீலன்
மன்னும் பொன்னும் மனைவி சுற்றமும்
என்னிய வுயிருங் காணு மெய்பொருளுங்
கோயி லண்ணன் குரைகழற் குரியவென்
றோயிறு மாக்கு மிணையில்வன் புகழோன்



றெளிதும் பாலினூர் திகழ்கவி பாடுவோ
ஞனிலம் போற்று நான்மறை யாளன்
ஒருநாளை யாயினு மொழுக்கந் தவறுப்
பெரு மாளை யங்காரப் பெயர்
வேங்கட தாசனும் விழுமி யோனே.

திரளி வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ முகுந்ததாசனென்கிற
ப. கி. தி. கிருஷ்ணய்யங்காரவர்களியற்றியது.

மின்னியசிகரி சிகரிகளேய்ப்ப விளங்குபொற் கூடல்மாவின்சீர்
நன்னெறிவிளக்க வுலகெலாநயக்க நான்மறை வையினைவருணத்தில்
மன்னியகீர்த்தி விழுப்பநல்லூரில் வந்தவதரித்த நம்பெருமாள்
பன்னினனதனைப் பார்ப்பவர்தினமும் பரமனுக் கடியாராவரே.

நாலாகுந்தனி நன்மறைநாதன்
மாலாகுந் திருமாமதுரைச்சீர்
மேலாகும் பெருமாளெனு மேலோன்
பாலாகுந் தமிழிற் பகர்வுற்றான்.

திருச்சித்திரகூடம் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ
வேணுகோபாலய்யங்காரவர்களியற்றியது.

சுந்தரமிந்தார்சோலை மாடமதுராபுரி நற்கவின் வியூகச்
சுந்தரராஜப்பெருமாள் மான்மியத்தை விழுப்பநல்லூர்த் தூயவிப்ர
சுந்தரராஜன் சுதனுங்கோயிலண்ணன் றிருவடியுஞ் சாரகனெல்லாம்
அந்தரங்கத் தார்ந்தவனுமான வேங்கடதாசனருளிச்செய்தான்.

பூசுரருமற்றெவருஞ் சகலகல்வி கற்றவரும் புகழுகின்ற
பாசுரங்க ளிருநூற்றைம்பத்தேழாஞ் சர்க்கங்கள் பதின்மூன்றாகிக்
காசுரமிக் கதிகமெனு மால் குணநேரமுதப்பாற் கடற்பெருக்காய்
மாசுருமியப்ப வுலகெங்கணுஞ் சேர்ந்துற்றதுமங்களங்கடானே

சாற்றுக்கவிகள் முற்றிற்று.



# அவதாரிகை.

ஸ்ரீய: பதியாய் சர்வாந்தர்யாமியாய் ஸ்ருஷ்டி ஸ்திதிஸம்ஹார கர்த்தாவாய் நித்ய பரத்வமாய் சமஸ்தகல்யாணகுண பரிபூர்ணனான ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீவைகுண்டத்தில் ஆதிசேஷபரியங்கத்தில் பிர்மேந்தர் கருடவிஷ்வ சேனாதி நித்யசூரிகள் சேவைசெய்ய நூபுர கனகாம்பர பஞ்சாயுத கவுஸ்துபகிரீட குண்டலஹார கேயூர திவ்யாபரண பூஷணனாய் ஸ்ரீபூமி நீளாசமேதனாய் யெழுந்தருளியிருக்கிற திவ்யமங்கள விக்ரஹ சேவையை சமஸ்தசேதனர்களும் சேவித்து உஜ்ஜீவிக்கத் திருவுள்ளம்பற்றி

ஏஷ நாராயண ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதன: |
நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்யஹ்யாகதோமதுராம்புரீம: |

என்றபடி கடல் சூழுலகமாகிய விப்பாதகண்டத்தின் தென்தேசமான பாண்டியநாட்டின் கதலிவனத்திலே மதுராபுரியில் கிருதமாலா, வேகவதி மத்தியப்பிரதேசத்தில் சொர்ண்ணமுகி புஷ்கரணி சமீபத்தில் அஷ்டாங்க விமானத்துள் ஸ்ரீ மதுரைவல்லி மகாலெக்ஷ்மிசமேதராய் வியூகசுந்தரராஜனென்ற திருநாமத்தோடு ஹாகூய வரதஹஸ்தனாய் வீற்றிருந்த திருக்கோலமாய் எழுந்தருளியிருந்து ஆசிரிதரட்சண சகல ஜெகப்பரிபாலன மோக்ஷப்பிரசாதனனாக அனுக்கிரகஞ்செய்து வருவது எங்கும் பிரசித்தமே.



பின்னும் முந்திய யுகங்களில் மார்க்கண்டேயர் சனகசனந்தன சனத்குமாராதிகளுக்கும் பிருகு புரூரவசக்கரவர்த்தி முதலான அரசர்களுக்கும் சர்வாபிஷ்டங்களும் பிரசாதித்தருளினது புராணசித்தாந்தமாயிருக்கிறது.

இக்கலியுகத்தில் இந்த மதுரை நகர் அரசாட்சிசெய்த ஸ்ரீவல்லபாண்டியன் சபையில் கருடாம்சமான பெரியாழ்வார் யெழுந்தருளி வஸ்து நிர்ன்னயஞ் செய்தபோது சேவை சாதித்த வியூக சுந்தரமூர்த்தியின் திவ்யமங்கள விக்கிரகத்தைப்பற்றி 12 பாசுரத்தால் சொல்லிய திருப்பல்லாண்டு என்கிற திவ்யப்பிரபந்தம் மற்ற திவ்யதேசங்களிலும் முதலிற் றுடக்கமாய் எல்லா எம்பெருமான்களுக்கு முகப்பாகி நம்முடைய பூர்வாசாரியர்கள் முதலானோர் அநுஷ்டித்தும்வருமிதனின் உற்பத்தி இந்த திவ்யதேசமாயிருக்கிறது.

அன்றியும் ஸ்ரீவைகுண்டத்திலும் இம்மதுரையிலும் திருக்கோஷ்டியூரிலும்தான் அஷ்டாங்க விமானமுள்ளதென்பது புராணவாக்கியத்தால் தெரியலாகும். விமானத்தாலும், தீர்த்தத்தாலும், மூர்த்தியாலும், க்ஷேத்திரத்தாலும் மற்ற எவ்வித வைபவங்களாலும் இந்த திவ்யதேசம் சர்வோத்கிர்ஷ்டமான தென்பது இந்த ஸ்தல புராணத்தால் புலப்படும்.

மேலும் இவ்வெம்பெருமானே அதிஷ்டான தேவதையாய் இதற்கடுத்த வாரணத்திரியில் நரசிம்மமூர்த்தியாயும் இடபாத்திரியில் சுந்தரராஜனாகியும் குருவீற்றிருந்த துறையில் சித்திரதவல்லபனாகவும் யெழுந்தருளியிருந்து சர்வாபீஷ்டங்களையும் தந்தருளி வருகிறதாயிருக்கிறது.

இந்த க்ஷேத்திரத்தின் மகாத்மியங்களை யெல்லாம் ஆதியில் ஸ்ரீமந்நாராயணன் சேனை முதலியாருக்கும் அவர் பிர்மாவுக்கும் பிர்மா நாரதருக்கும், நாரதர் வியாசருக்கும், வியாசர் சௌனகாதிரிஷிகளுக்கும் உபதேசித்தார்கள். அதைப்பற்றி பிர்மாண்ட புராணம் 82 முதல் 93 வரை 12 அத்தியாயங்களால் வடமொழியில் விஸ்தரிக்கப்பட்டிருப்பதை கல்விப்பயிற்சி, நற்குணம் நற்செய்கை லேசமுமில்லாத நான் ஆசைமேலிட்டதினால் மதுரை

வல்லித்தாயாரை புருஷகாரமாகக்கொண்டு விழுதகைக்தாராஜ ன் திருவடி சகாயத்தாலும் ஆழ்வாராசாரியார் முதலிய பெரியோர் கள் அனுக்கிரகத்தாலும் திராவிடத்தால் 257 கவிகளடங்கிய 13 சர்க்கத்தால் பிரதிஷ்டித்த இந்த ஸ்தலபுராண சங்கிரகத்தை சாதுக் கள் எல்லோரும் அங்கீகரித்தருள மிகவும் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

இராமானுஜ நூற்றந்தாதி ஐந்தாவது பாசுரம்.

எனக்குற்ற செல்வமிராமா நுஜ னென்றிசையகில்லா
மனக்குற்ற மாந்தர் பழிக்கில் புகழ் அவன் மன்னியசீர்
தனக்குற்றவன் பரவன் திருநாமங்கள் சாற்றுமென்பா
வினக்குற்றம் காண்கில்லார் பத்திபேய்ந்த வியல்விதென்றே.

வெண்பா.

ஆழ்வார்கள் செந்தமிழை யாதரித்த வேங்கடமென்
தாழ்வான புன்சொல்லும் தாங்குமால்—எம்பாரும்
வெல்லுங்கதிர்மணியும் வெம்பாலுஞ் செஞ்சாந்தும்
புல்லும் பொருந்தவையே போல்.

அவதாரிகை முற்றிற்று.



காப்புகள்.

சொன்மைமாமுகித் தடமதுராபுரிசுருதி
தன்னலத்திதழ்விழுக நேர்சுந்தரராஜன்
தன்னடிச்சடாயுத மக்கரஞ்சார்பில்
மன்னுமீவீந்திரச் சேனையர்கோன் கவிவைப்பாம். (1)

திரணமித்திர சத்திரமித்திர மின்னாரசுரரோடு சனன
மரணமற்றிடு நித்தியவாழ்வருள் மங்கள வீட்சணமாதா
ஆரணமைந்த பொற்புரிசைகளிலமி வற்புதமதுரைமாவல்லி
சரணபங்கசவர்ச்சனையிகபர சாதகமாம் நினைமனமே. (2)

கருவாகரர் திருமாலடிகளனும்படி செய்யுங்
குருவாகிய பெருமானணி குருகூர்முகில் மறைசேர்
திருவாய்மொழி சொன்னருள் செய்தான் கவிமாலை
தருவான்புகழ் மதுருதனன் தாட்டாமரைசேர. (3)

தந்தனத்தந்தன மென்னவளி முரனுமதுமலர்த் தண்டலைகள்சூழும்
வந்தனந்தந்தனத்தானும் வாழ்மதுரைக்கூடல் திருமால்புகழ்க்கு

நந்தனர்தனன் கருணையார்பதின் மராரியர்கள் ஞானப்பூதூர் [ம்
வந்தனந்தனம் சமதாமளதிராசன் மாமலர்த்தாள்வணக்கஞ்செய்வா

பாடலணிமாடம் பணைபொழில் சிறார்மதுரைக்
கூடலழகன்குணமதனைப்—பாடப்
பணவாளரவணைமால் பாதமலர்போற்றும்
மணவாளமாமுனி தாள்வைப்பு. (5)

சகலமறைநவிதிகாச புராணமெங்கும்
சார்ந்தடாமதைக வொழுந்துக்கல்வி யெல்லாம்
புகலுதற்குக் காரணமாய் மாலினுந்திப்
பூவிலுதித் துலகனைத்தும் படைக்குமூர்த்தி
திகழலைவியாந் தேவியுமாய்த் தூயவெள்ளைச்
சிற்கமலத் தன்னையெனவெ வருமல்லும்
பகலுங்கொண்டாட வளர்வாணிபாத
பங்கயமிக் கவிகளுக்குக் காப்பதாமே. (6)

சுசரதபரியாளார்ந்த கனகநாடாமயோத்தி
தசரதனையராமன் சானகிநாதனன்பு
வசரதம்பருகுஞான மாருதி விசயன்தேர்த்த
வசரதச்சரணப்பூவை மனதினில்வைப்பாய் வைப்பாம். (7)

சேடாவதாரன் திருவாய்மொழிப் பிள்ளைசேவடிவிட்
டோடாதசிந்தை மணவாளயோகி யுயர்சரணத்
தோடாரவிந்தங்களாங் கோயிலண்ணன் றுதி செய்தம்பொன்
வீடாமகற்கூடலழகன் புகழைவிளம்பினனே. (8)

## அவையடக்கம்.

விருத்தம்.

மங்களஞ்சேர் பரமபதவெழில் கொண்டோங்கு
மதுரைநகர்க்கூடல் மணிச்செம்பொற்கோயில்
அங்கனகமுடிச்சோதி சங்கசக்ர
ஹாரகேயூர குண்டலம் வில்வீசச்



செங்கமல வருட்கண்வீட் சணஞ்சிறக்கச்
சேர்திருவோர்டோர் நீலவரைபோலன்பர்
தங்களுக்கா பயமுத வஸ்தவ்யூக
சவுந்தரராஜன் குணங்கள்மிகு மனந்தம் (1)

அனந்தகல்யாண குணமகிமை வேதன்
ஆதிசேடன்மறைகள் ஞானயோகர்
தினந்தினமு மெண்ணியெண்ணிப் பார்த்துங்கூடச்
சிறிதுமறியாதவந்தக் கொம்பிற்றேனை
இனந்தன்னி கைகண்காலக விலாதுன்னா
வெண்ணுவதுபோ விழிவாமுட நாயேன்
மனந்தனி லாராசையிறைப் பிதற்றும்பாக்கள்
மண்பூமாலர்ச்சனைப் பூவாரோர்க்கேர்க்கும் (2)

# நூல்.

## 1-வது வரலாற்றுச்சருக்கம்.

விருத்தம்.

நாரணன்முன் நான்முகனுக் குபதேசித்த
நன்மைதனை நாரதனுக் குரைத்தானந்தப்
பூரணனும்பிரமசபை யதனில்வ்யாச
புண்ணியனுக் கவ்விதனை சொல்லக்கொண்ட
ஆரணனுஞ் சூரசபதித் தீர்த்தத்தார்ந்த
அருஞ்சௌன காதியர்க்கு நவின்றசேம
காரணஞ்சேர் மதுரையெனுங் கேத்திரத்தின்
கருதரிய மகிமையது கடற்பெருக்கே. (1)

அக்கடலைக் காண்கவெண்ணப் பருகவற்ப
வறிவனுவு மில்லாமலாழ்ந் தலைந்து
துக்கமுற்றேன் முன்சொன்ன பெரியோர்பாத
தூளியுளக் கொண்டுமுடி சூடிக்கண்ணன்
சக்ரவர்த்தித் திருமகன்றன் செய்கையெல்லாம்
த்யானித்தே னதிலூறு மமுதத்தேனுண்

டிக்கனியின் றிரவிடத்தைச் சொன்னேனோர்க்கும்
இராகவன்முன் சபரிகனி கொண்டாற்போலே (2)

வேறு.

சீர்பெறுஞ் சௌனகாதி மாமுனிவர்
செழுமறை யார்ந்துநற் றவத்திற்
பேர்பெறும் வியாசபகவனைத் துதித்துப்
பிரபல மானதும் புண்யம்
சேர்பெற முத்திதருவதுமான
நித்யமங்கள சுபக்ஷேத்ரம்
சார்பெற மகிமையுரைத்திடக் கேட்கும்
தபோதனர்க் கருள்முனி கூறும். (3)

தவமதிற் சிறந்தசௌனக முனிகாள்
சாற்றுவன் வினயமாய்க் கேண்மின்
எவர்களும்புகழுங் காவிரியதனைச்
கேழுயோசனை யுளதென்பால்
புனைமதேந்து மிடபாத்கிரியில்
பூர்த்திருமின்றேடு மன்புற்
றுவந்திடுமுகிலின்பாத நூபுரத்தில்
உற்பத்தியானதோர் தீர்த்தம் (4)

புண்ணியமிகுமத் தீர்த்தத்தின்றென்பால்
புகலவோர் யோஜனைதூரம்
நண்ணியப்பாலார் கதம்பாவனத்தின்
நடுவினிற்கண்ட மாத்திரத்திற்
பண்ணியபாவம் போக்கின்றன
பலந்தருமச் சுதந்தன்றென்
றெண்ணியகிர்தமாலா நதியெனவே
யெங்கணும்பேர்பெற விளங்கும். (5)

அந்நதித்தென்பாற் பாண்டியவம்சத்
தரசிற்புரூரவ னென்னும்
மன்னவன்வகுத்த வியூகமதான
மதுரையாநகர மொன்றுண்டு



பொன்னகர்போல மந்நகரதனில்
புகழுறுந்தேவ கம்மியனும்
நன்னலம்பெற வட்டாங்கவிமானம்
நாட்டினனும் பருமகிழ (6)

அற்புதஞ்சேர விமானமேலெங்கள்
அச்சுதனுலக பாலனஞ்செய்
கற்பகநிதியாய் மலர்மகளுடனே
கழலிணையடியவ ரெல்லாம்
சிற்பரநிதி யிகபரவாழ்வை
மேவிடவாத எழுறலந
தற்பரந்தாம வாசமாயருளோர்
நயனவீட்சணைத் தோடுமேவும். (7)

மாதவமுற்றசனத் குமாராதி
வாழ்த்திடவந் திடும்வண்ணம்
சோதியாமந்த விமானத்திலர்ச்சா
சொரூபமாயெழுந் தருள்முகிலை
பாதவந்தனத்தோ டர்ச்சனைபலவும்
பண்ணியா ராதனஞ்செய்து
சாதகம்பெற்று வருகிறாரினமச்
சனத்குமா ராதியர்தாமே. (8)

வேறு.

இந்தவிதமாய்முனி யிசைத்தமொழிஞானம்
தந்ததையுணர்ந்துதவ சௌனகருமின்னம்
சுந்தரமுகிற்க தாசதையுணவிரும்பி
அந்தணபராசர னருட்சுதனைவாழ்த்தி (9)

பத்தியொடுகேட்கமுனி பைந்துளவமாயன்
நித்தியனுகந்து நிகழ்த்தலரிதாமென்
புத்தியிலுதித்தது புகன்றிடுவனென்றவ்
வுத்தமசரித்திர முரைத்திடலானான். (10)

முதலாவது வரலாற்றுச் சருக்க முற்றிற்று.

## 2-வது நாடு நகரச் சருக்கம்.

### விருத்தம்.

அம்பரந்தனிற் கொண்டல்வெண் மேகபோலார்த்து
அம்பரப்புன லுண்டுமா லுருவெனவ மாழி
அம்பரத்தவன் வனையெனவில்லி நின்றதிர்ந்து
சம்பரத்தைப் பொழிந்தது செழித்தது தரணி. (1)

நாகபாலவரை குறிஞ்சிகளிற்பெயும் நன்னீர்
நாகமாவரை யுழைதனையிர்த் துவானன்ன
னேகபால திரைக்கரமணிகளை யிறைத்து
மேகமாய்க்கிடந் மாலெனக் கடல்மேவும். (2)

கார்வள லருணோங்கி முப்போகங்கள் காட்டும்
ஏர்வளம் பெறுவளுறு நாடாம்பனை யெல்லாம்
நீர்வளந்திகழ் செங்கெலுங் கன்னலு நிறைந்து
சீர்வளர்ந்திடும் நித்திலமுதிர்ந்தது சேர்சிறக்கும். (3)

அற்புதச்செழு முக்கனிப்பொழில்க ளோடணைந்து
சொற்பயின்று கோகிலங்களுஞ் சுரும்பினந் தொனிக்கும்
நற்பலங்களாற் மதுமலர்த் தண்டலை நன்னெறி
பொற்படித்துறை நற்புனலார்த்திடும் பொய்கை. (4)

வண்ணமாட மாளிகைகள் சூழ்ந்தச்சுதன் மலர்த்தாள்
எண்ணமேகொளுஞ் சிந்தையோர்வாழ்வுறு மெழிலார்ந்
தெண்ணிலா நவநிதிகள் சேர்ந்தெங்களுந் துதிக்கும்
கண்ணனூர்ந்திடுமா நகரிதுவெனக்காட்டும். (5)

திக்கிலுந்தனி யுயர்ந்தபேரகழியு மெழில்வான்
துன்னமேவ திகழ்கோட்டையுஞ் சூழ்ந்துமண்டபங்கள்
சொன்னமா மணிக்கோபுரச் சோபிதமார்ந்த
நன்னலந்தனைக் கண்டிம்பர் நாடொறும்வசிப்பார் (6)

ஆவணங்களிலணி வளங்கெழு வளமாரும்
பூவணங்களில் நித்திலமணி யணிபூத்துங்



காவணங்களிற் கமுகொடு கதலிகள்சேரும்
பாவணங்களில் பொழிலுறு குயில் கிளியாடும். (7)

ஆரணஞ் சொலுமந்தணர் மாளிகையொருபால்
வாரணந்திகழ் மன்னவர் வீதிகளொருபால்
பூரணம்பெறும் வணிகர்கள் புகுமிடமொருபால்
தோரணஞ் செறிசூத்திரத் தெருக்களுமொருபால். (8)

விரதவந்தணர் மனைதொறும் வேள்விகள்விளங்கும்
வரதனைத் தமையாள்பர் பூசையே முழங்கும்
இரதத்துங்க வாம்பரியாட்களின நிறையும்
பரதநீதன வேதமந்தரத் தொனிபரவும். (9)

மண்டலத்தினில் விழுமிதிணையிலை யெனமேழ்த்து
விண்டலத்துளோர் வியந்திட விரும்புவர் மாதம்
கொண்டல்முழு மழைபொழிய முப்போகமுங்கொடுக்கும்
கண்டனைச் சுபங்காட்டிய பாண்டியநாடு. (10)

2-வது நாடுநகரச்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 20.

---

## பிர்மாண்ட புராணம் 82-வது அத்தியாயம்
## 3-வது சங்கரன் தவமணப்புரிச்சருக்கம்.

### விருத்தம்.

மதுவாக்கேத்திர வைபவமாஞ்சுவைத்
மதுநிறைந்த பிரமாண்டபுராணவெண்
பதினிரண்டுமுதற் பனிரண்டதாம்
துதிகள்பெற்ற வத்தியாயத்தைச் சொல்லுவாம். (1)

வேகமாகதியோரம் விளங்கிய
மாகதம்பநேர் வனமொன்றுண்டதில்
பூகமாலிலா புன்னையசோகொடு
மேகமார்பொழில் மேவுமனேகமே. (2)

இடபமால்வரைக் கெதிர்ந்ததென்கடல்
குடகுநீள்கடல் கொண்டவிடமெலாம்
திடமலைப்புயத் தென்னவனுள்ளையாம்
புடவியோங்கிய புண்ணியக்ஷேத்திரம். (3)

இதற்குமத்தியில் யாவரும் வாழ்த்திட
பதத்தமழாயவி பரமனுற்றவர்
புதத்தினேக்கும ட்டாங்கவிமானபபொற்
பதர்க்குக்கீழ்த்திசை யண்டர்கள் போற்றிடும். (4)

சுத்தமோங்கிய சொன்னமுகியெனும்
உத்தமத்தடமார்ந் தயர்வாம்வளம்
அத்தீரயுங்கொரு மற்புதமாகிய
சித்ரவிமானமால் வீற்றிருந்தனன். (5)

வேறு.

சொன்னபுட்கரணி மேல்பால் சுரர்களுங் காணற்கெட்டா
கன்னலைவருட்டிறந்த நாரணன் றன்னைநோக்கி
பன்னகாபரணவீசன் பகருதற்கரியயோகந்
துன்னிய தவத்தின்சோதிச் சுடர்வினிற்சென்றதன்றே (6)

சத்தியவுலகமுட்டத் தமித்திடவும்பரெல்லாம்
சித்தியார்நான்முகன்கொள் தேவனோடவையில்யோக
சித்திரைசெய்யுமாதி நின்மலமுனிலஞான
பத்தியாற்றேக்கரித்த பான்மையைச்செவியுற்றனே. (7)

அம்மிருந்தெழுந்தன்புற்று ரசரீரியாகவீங்கன்
இங்குவந்துற்றயாற்றம் இயம்புகென்றுகேட்க
சங்குசக்கரத்தைமாய நத்தவைவாரிமாலே
சங்கரன்றவத்தின் றுபஞ்சகிப்பதற்கரியதாமே. (8)

என்றுகைமுடியின்மேல் வைத்திறைஞ்சியவிதியும்பார்க்கு
நன்றுயர்மங்களத்தை நவின்றுமாதவன்சொல்வான்பிர்
துன்றியவழுதிநாட்டிற் றலக்குமேகவதிப்பாங்கில
கொன்றையஞ்சடையான்றக்கப் பிரசாபதிகோபத்தாலே. (9)



சாபங்கொண்டனங்கனோயாற் சைலராசன்பெண்ணை
சாபநேர்புருவம்வேற் பொற்றங்கணாருமைமணக்கக்
கோபம்விட்டொம்மை நோக்கிக்கொள்கின்றான்தவமதென்று
ஸ்ரீபதிசொல்லிப்பின்னுஞ்ஸ்ரீ செப்புவான்விதிவானோர்க்கே. (10)

அஞ்சலிகொஞ்சகாலம் இகன்றபினதன்தென்மேற்கில்
மிஞ்சியபுகழட்டாங்க விமானத்தில்வாசமாம்நாம்
செஞ்சடைச்சம்புவுக்குத் தெரிசனந்தந்தவன்றன்
நெஞ்சகிலுற்றவச்ச நேரிழைமணஞ்செய்விப்போம். (11)

அந்தநல்வழுவைச்சீர்மை யானபின்விமானத்திற்கு
முந்தியசற்றேமேற்கில் முதல்வராமுங்களுக்குச்
சந்ததங்கெடுதல்செய்யுந் தாருகாசுரனைவென்று
சிந்தையில்மகிழ்வதாகச் செய்குவோஞ்செல்கவென்றே. (12)

மாயவனந்தர்த்தான மாகநான்முகன்விண்ணோர்ந்த
தூயவரெல்லாமாலின் றோத்திரம்பலவுஞ்செய்து
நேயவன்பாகத்தங்காசீ லிலந்தனிலுற்றார்பின்
பாயவன்சரித்திரத்தின் அற்புதம்பகாலுற்றும். (13)

பிரமாண்ட புராணம் 83-வது அத்தியாயம்.

வேறு.

பலகாலவூழிமுறையிட்டாலு மெட்டாதபரமமூர்த்தி
சிலகாலமதிருடிதவனோர்மை யதுகண்டுசிந்தைகொண்டு
விலகாதவொளியாருமட்டாங் கவம்பொன்விமானத்திருந்
திலகாரகேயூரமகுட குண்டலவாழிசங்கமேந்தி. (15)

வேறு.

கருமுகிலைநிற்குந்தளமுமாட காம்பரமுமிருகருணைபார்த்த
திருவனசநயனமதுங்கவுத்துவ மாமணிமார்பிற்றிருவுமன்னக்
கருடன்மேனெருந்தருளி வரக்கண்டசம்புவுள்ளக்களிகெழுந்து
திருவடியில்வீழ்ந்திருகை யஞ்சலித்துக்கண்குளிரத்தெரிசித்தானே.

பற்பலவாஞ்சருதிகளாற் றோத்தரித்து
நேத்திரத்தில் நீர்பனிப்ப

னிற்பவனைப்பார்த்தருளிக் கயிலாச
    பதியையீ நிகழ்ந்துப்போக
வற்புதநற்றவத்திறைக்கு வந்தோமுன்
    னெண்ணாஞ்சொல் லளவிலாத
கற்பகம்போற்றருவோ மென்றுரை
    செய்தான்செங்கமலக் கண்ணன்றனே. (16)

பரமனென்கேட்டுமகிழ் வாகியன்பு
    பத்தியொடு பணிந்தோர்கொண்ட
சிரமமெலாந்தீர்த்தருளுங் கருணை
    வாரிதியான தேவபதஞ்ச
சரமதன்தாயங்கொ ளென்றனக்
    காமுதமெனுந் தைலப்பாவை
வரமனைத்தைத்தந்தருள வேண்டுமென்று
    பரவசமாய் வாழ்த்தினனே. (17)

நன்றுநுஞ்சங்கரனின் றவத்தைகளிட்டுக்
    கூவிலை கன்னிகாம்சேர்
பின்றுங்குமட்டாங்க விமானத்தி
    னருகாக விளங்குகின்ற
பொன்றுங்கு புஷ்கரணிக்கரையிருந்து
    சிலநாளெம் பூசைசெய்தால்
நின்றுபந்திர்ந்து மணமெய்துமென்றுமால்
    மறைந்தான் நேசமுற்றே. (18)

அக்கணமேயச்சுதன் சொற்படிபுனிதவல்லிட்டத்தி
    லார்ந்து கிட்டை
முக்கணனுற்றனங்கார் புண்ணியநீராஞ்
    சொகைவமுகிபால்நன்மு
னிக்கணங்களொடு லபிட்டன்புனலாடு
    விமானத்தார் நிதியைவேத
லக்கணத்தின்முறைப்படியே வத்தனஞ்செய்
    தேருமெந்த நாளுந்தானே. (19)



அம்முறையேவசிட்டமுனி யின்பொருநாள்
    நீராடி யழகன்றனிற்
செம்மலராற்றவத்தரொடு பூசித்துவிடைகொண்டு
    செல்லுங்காலை
மும்மூர்த்தியுருவான விபூகமுனிவசிரீ
    முநிநாளிக்கார்
நம்பரனேயோர்வனை யிராசனிடஞ்சென்றிதனை
    நவிலுஞ் சொல்வீர். (20)

மகமேருவுனதக பார்வதியைச்
    சங்கரற்கு மணஞ்செய்வித்தால்
செயமேவுபுகழாகுமென் மெய்ஞானயமனத்தைச்
    செய்யுமென்கள்
சுபமேவுகல்யாணமாக்கி வரவேணுமெனச்
    சொல்லுகற்றேன்
அகமேமகிழ்வாகிச் சம்புவினையாதரத்தோ
    டழைத்துச் சென்றார். (21)

கண்டிமையவரையுருவ மாணிடனாய்வந்திவர்கள்
    கழல்பணிந்து
தொண்டேனேபூசைகள் செய்தாசனங்களித்துமிகத்
    தோத்தரித்து
பண்டுசெய்ததவத்தாலிப்பருப்பதம் வாழ்வுற்றதெனப்
    பகர்ந்து நீங்கள்
புண்டரிகப்பதம்கோவ விசனேவெந்தசெயல்
    புகல்வி ரென்றான். (22)

என்றுரைசெயிமவானைப் பார்த்துமுனிக்கணங்களித்த
    விசனுக்கு
நன்றமருநின்புதல்வி பார்வதியாமருள்கிறந்த
    நயனத்தானை
மன்றல்செயவ்யூக சுந்தரராஜவரதமுகில்
    வரையிராச

வுன்றனக்குநியமித்தா னென்றுரைக்குமுனம்புளக
முற்றான்றானே. (23)

கயிலைவளர்கங்கைகொன்றை சந்திரசேகரவீசச்
செம்முகிற்குக்
குயிலைமிஞ்சுமென்றமொழி யிடையுடையகவுரி
யெனுங் கோமளஞ்சேர்
மயிலைவரவழைத்துதக பூர்வகமாய்முநிகள்முன்பு
மணஞ்செய்வித்துச்
சயிலமகராசனுயர் சிவன்மருகனாகவருஞ்
சம்பத்துற்றான். (24)

மந்திரஞ்சேர்முநிவரெலாம் வைதிகமாங்காரியத்தை
முடித்து வாழ்த்த
விந்திரனும்வந்துயர்ந்த கற்பகப்பூமலர்கள்சொரிந்
திறைஞ்சி நிற்க
அந்தரதுந்துபிமுழங்கக் கந்தருவரிசைபாட
யரம்பையாடச்
சுந்தரமாய்ப்பார்வதியைச் சங்கரனுமணந்துசுக
சுபங்கொண்டானே. (15)

சங்கரனுமுமையினொடுகயிலை சென்றான்மற்றெவருஞ்
சார்ந்தார் தங்கள்
தங்களிடமென்றுரைத்துத் தியானங்கொள்வியாதனைநற்
சௌனகாதி
எங்கள்செவிக்கின்னமுதாய் பவவிருட்குச்சோதியதா
யிருக்குமாயன்
மங்களங்களின்னமுமியருள்க வென்றோர்க்கின்புறவே
வழுத்தலுற்றான். (26)

3-வது சங்கரன் றவமணம்புரிசருக்க முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் 46.



## 4-வது க்ஷேத்திரதீர்த்த மகிமைச்சருக்கம்.

விருத்தம்.

கதலிபலா மாமுதலாந் தருக்களார்ந்த
கரையதனிற் கிருதமாலா நதியின்பக்கல்
பதவிபெறத் தேவதச்ச னியற்றலுற்ற
பைம்பொன்மணி யட்டாங்க விமானந்தன்னில்
இதமுலவுகிர்தயுகத்தில் பிரமன்வாழ்த்த
எப்பொழுதுஞ்சனகாதி முநிவர்போற்ற
நிதமணிபூமாலை யெனக்கிருதமாலை
நேயவந்தான் வைகுந்தநிமலன்றானே.

சூரியமண்டலந் திருப்பாற்கடல்வைகுந்தம்
தொன்னகரமதுரை திருக்கோட்டியூரிற்
சீரியனுமட்டாங்க விமானந்தன்னிற்
செகநாதனிருக்கின்ற விவ்விமானம்
பேரியனுமுற்காலம் விதிப்படிக்காம்
பிரதிட்டையுடன் ஸ்தாபிக்கலாகிச்சாயை
நேரியனுமெட்டு யோசனையுற்றார்கள்
நிதயமுத்திமற்றெவர்க்குந் தருவர்தாமே

மாமதுரையட்டாங்க விமானச்சார்பார்
மாதவர்க்கும்யோகியர்க்குஞ் சித்தியாகும்
சேய்மாயிவ்வுலகில் வாழ்ந்துமற்றோர்
செம்பொன்னுடாள்வரிதைக் கற்றோர்கேட்டோர்
சோமபரிமேதபல னண்ணிமுத்தி
சேர்வரென நாரதனார் சொன்னவிந்த
நாயக்ஷேத்திரமகிமை சருக்கமாக
நவின்றேனென்றான் வாதராயணன்றான்

பிரமாண்ட புராணம் 84-வது அத்தியாயம்.

தத்துவந்தேர்வியாசமுனி தன்னைவாழ்த்தி
சௌனகாதியர்கல வட்டாங்கமென்னும்
உத்தமமாம்விமானத்தின் காற்புரத்தும்
உள்ளபுண்ணியதீர்த்தத்தின் மகிமைதன்னை

சித்தமகிழ்ந்துரைத்தருள்வா யென்றுகேட்கத்
தியானித்துச்சொல்லலுற்றான் விமானத்திற்கோர்
உத்தரமேற்பக்கத்தி லெவரும்போற்ற
உன்னதமாயெழுகட லென்றேவிளங்கும் (4)

மார்க்கண்டமுனி முன்னாள் தவமியற்றி
வாரிதியேழாடினதின் பலனும்வந்து
சேர்க்கமுறச்சேர்ந்ததினா லந்தவாவி
சீராருமெழுகடற் பேராயிற்றெண்ணப்
பார்க்கரோடவரும் பலன்களெல்லாம்
பைம்பொன்னாட்டமரர்தினம் படிந்துசெல்வர்
நீர்க்கரையிலனேகவித தருக்களோங்க
நேர்ந்தவந்தத்தடத்திற்கு வடமேற்பாங்கர் (5)

மானசமென்றொருதட முண்டதனிலும்பர்
மாதவரோடரம்பையரு நீர்படிந்த
கானந்தமாகிநல்ல கதிபெற்றார்கள்
அதன்றென்பாற்காசிப வாச்சிரமந்தோன்றும்
மோனமிகுசப்தரிஷி தவமதாங்கே
முன்சொன்ன விமானத்தின்மேற்கதாக
ஞானமுறுஞ்சேட தீர்த்தமுமடுத்து
நன்னுசக்கிரதீர்த்தம் நன்றும்தானே. (6)

அவ்விடத்திற்காசிபமா முனிசெய்யோக
வருந்தவத்துக்கச்சுதனு முகந்துதோன்றி
இவ்விடத்திற்றவமுறுமா முனியேயுன்றன்
இட்டமதைக்கேளெனவே யிறைஞ்சிவாழ்த்திப்
பவ்வியமாயிச்சக்கர தீர்த்தந்தன்னிற்
பண்ணியநற்றவவெப்பங் கொண்டதாலுன்
செவ்வியபூந்திருவடிநற் சாயைப்பாங்கிற்
சேர்ந்துகுளிர்ந்தெப்பொழுதும் வாழ்கச்செய்வாய். (7)

பின்னுமிந்தத்தீர்த்தத்திற் படிந்தோரெல்லாம்
பேரின்பமுற்றுன்றன் சரணந்தன்னிற்



மன்னும்வரந்தந்தருள் வாயென்றுகேட்க
மாதுமுவந்தருளியந்தர்த் தானமானான்
என்னுமிந்தமகிமைதனை வேதவியாதன்
இசைத்தன்புபத்தி நிஷ்டைஞானயோகந்
துன்னுமனச்சௌனகாதியர்க்குச்சொல்லத்
தொடங்கினான்மறுமை மான்மியங்கள்நன்றே. (8)

4வது க்ஷேத்திர தீர்த்தமகிமைச்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் 34.

பிரமாண்ட புராணம் 85-வது அத்தியாயம்.

## 5-வது பிருது சக்கரவர்த்தி முத்திபெற்ற சருக்கம்.

விருத்தம்.

வேகநதிக்கரையார்மதுரைப் பதிமேற்குறுவகைதீர்த்தம்
ஆகமனோர்புனிதந்திகழ் அவ்விடம்அட்டகசங்கள்மகிழ்
வாசுநார்த்தனனைத்தினமெண்ணி யமர்ந்திடுமதன்றன்றெற்
காகவருந்தவமுற்றனர் சனகசனந்தாதியரே. (1)

சாத்தியமோதுகரப்புனலற்ப சமீபமதிற்கொளுதோ
தாத்திரியென்றொருபருவதமுண்ட ததன்குணபக்கமதில்
நேத்திரவுத்திரகோர்நரசிங்க னெழுந்தருள்நாகமலைச்
சேத்திரமார்சரபத்திரென்று திகழ்ந்ததம்மாலிரியே. (2)

அருளுறநேவுதுசெய்திடுநற் பிரகலாதனுளங்குடிகொள்
கருமுகிலன்னாசிங்கனை சோழகாகியவிஷ்ணுஜலம்
பருகுவதிற்பலவாலகில்யாதி படிந்துதினந்தொருமால்
திருவடிபோற்றிமகிழ்ந்துயர் பூசனைசெய்துவசித்திடுவார். (3)

பேர்பெருதிமோதாயுகமதிலன்பார் பிருதுமகேந்திரனற்
றார்பெறுமனையாளுடனுதினை மெட்டக்கரமதையோதி
சீர்பெறுமட்டாங்கமன்னிவிமானச் செந்திருமாலருளால்
ஏர்பெறுமெட்டெச்சதனையுமீன் றங்கிருந்தனன்வாழ்வுறவே (4)

இதமுறவிவ்விதநேர்மகிழ்வரசி யிருக்துவரும்பிருது
நகம்பனைத்தநிரமணிபமா யழகாகியநிர்கமாலே
நிதம்பணிசெய்பவைதன்கனை யச்சுதன்றிக்கியவாழ்வுறமற்
பதமிருகின்றவட்டாங்க விமானமேல்புக்கிமயங்கிடவே. (5)

ஒருதினமம்பொனிரதமதிற் செலவோர்க்கவிமானமதின்
திருவொளியால்மனமேறிய பரிதிகழ்தேரதுநின்றிடவே
மருத்துறசிந்தையனாகியிந்நிந்திட மாலடியார்களெலாம்
திருபவிமானிடமேற்செல நீயுயினைந்ததுசரியலவே. (6)

ஆதிலுமுன்மனைபாவொடுமிங்குறும் அச்சுதபத்தியதுண்
டாகிநலம்பெறவேளுதிபோதி யனுக்கிரகக்கொடுநீ
எதிலொவொனமிகவும் நடுக்கியிறைஞ்சிவருமனை வி
பாலிலும்நன்மொழியாளொடு மாலுதிபண்ணினன்பாலே. (7)

பாடினனென்றனா மாறிக்கினென்று பணிக்துயர் வரம்புகழ்கொண்
டாடினனென்பிழைபோக்கிமகிழ்க் தருள்சுதவென்றனுமே
காடியதம்பொன்விமானம் விழிக்கெதிராகவிறும்பரெலாம்
கூடியசன்னிதிகண்டுறுதொண்டது கொண்டனன்மன்னவனே. (8)

பத்திகொளும்பிருதுமன்னவனை பிடபாசலமிக்கவிடம்
நித்தியவாசமதாமெனைமகியுமுன் னேகருவில்விடமார்க்
அத்தமமாயபூசனைசெய்து பிறைஞ்சியபத்தினிமேய
டத்திருநாடுறவாயெனவந்தர்த் தானமதாயினனே. (9)

அப்படியேயிருதுசெய்துயர் முத்தியடைந்தனனென்றதனை
ஒப்பரிதாகியகாரதமாமுனி யோதினனக்கதையை
இப்பதிதன்னிலுமக்கிசைவித்ததை யெண்ணியயிக்கிடுவோர்
செப்பரிதாந்திருமால்பதநேருவர் சௌனகவீலர்களே. (19)

5-வது பிருதுச் சக்கிரவர்த்தி முத்திபெற்ற
சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் 64



## பிரமாண்ட புராணம் 86-வது அத்தியாயம்.

## 6-வது காலநேமிவதைச் சருக்கம்.

### விருத்தம்.

நல்லவேதவியாதனென்னு நாமனின்னமோதுவான்
வல்லஞானசிலர்வாமுமதனை மேற்கிலொன்றெனச்
சொல்லலாமயோகனைச் சிரார்ந்தராமேவுமோ
ரல்லல்போகவல்லநைமி சப்பெயர்கொள்கேத்திரம். (1)

மாவருக்கைபுன்னையோங்கு வாழைருக்கு [illegible]பகப்
பூவருக்கமூர்ந்துபன்றி புலிகள்சிங்கமா[illegible]யும்
பருவருக்குநன்மையாக நண்ணுமான்[illegible] யோகிகள்
நேவருக்[illegible]சமேவு திவ்யதேசமாகுமே. (2)

புண்யதீர்த்தமெங்குநேர்ந்து பூர்ணயோகசித்தியால்
கெண்யமானநற்றவந்தர் இன்னரா திபூசைசெ[illegible]
வண்யமுற்றசித்ரவல்லபம் முகுந்தவச்[illegible]
தன்னியன்றகருணையோடு சார்ந்துதாக்கும்னிலே. (3)

சிலநேருமுனிவர்தேவர் இன்னநோக்கேவயவர்
பாலனைகதினைமறன்ப பாவயிம்மைசெய்[illegible]
காலநேமியென்றதுட்ட கபடனெஞ்சன்மாயந்து
கூலநேசமாகவும்பர்கூடி யொன்றுசேர்ந்துமே. (4)

சாமகாலமற்றநேகதத்வ யோகசித்தர்க
ளாமனார்ந்தசிலைத்தரோடு சென்றுசதுமுகப்
பிரமன்முன்னதாகவே பெயர்ந்துநீண்டபாற்கடல்
பாமமூர்த்திபாதபங் கயங்களைத்துதித்தனர். (5)

தோத்திரத்திலுக்குயர்ந்த சோதிமாயமூர்த்தியும்
நேத்திரத்தெதிர்ப்படாமல் நின்றநான்குவேதநேர்
சாத்திரப்படிக்குயர்ந்த போதனைக்கடற்கதைப்
பாத்திரங்களானவுங்கள் பயமதென்னபகருவீர். (6)

கருணையானவார்த்தைகொண்டு காலநேமியிம்மையால்
கருகுகின்றகொடுமைசொல்ல கார்வணன்விளம்பிடும்

இருதமாலைதிகதம்ப க்ஷேத்திரங்கொள்மதுரையில்
ச்ருவமங்களங்கள்வந்துசார் விமானமார்ந்தநாம். (7)

இன்றெழுந்தகாலகால நேமியென்னுமசுரனைக்
கொன்றுமக்குநித்யவாழ்வு கூட்டலாகுமென்றுமால்
சென்றபின்புமுனிவர்தேவர் சேர்ந்துவந்தவனமதில்
நன்றமர்ந்தயோகராகி நாளும்வாசமாயினர். (8)

அட்டவங்கமானதின் [illegible] மரியெழுந்ததென்னவே
அட்டவக்கரத்தன்றன் [illegible]னுகவந்தயானையாம்
துட்டவக்ரகாலநேமி தன்னுசென்னிவீழ்விழ
வட்டசக்கரத்தையேவ மாய்ந்[illegible]. (9)

கோடிமுப்பத்தோடுமூன்று கொண்ட தேவர்வாழ்த்தினர்
பாடினார்கள்நாரதாதி பூரமாரணிதேயோ
டாடினார்கள்மண்டலத்த ராதிதேவமாதவர்
நாடினார்கள்முன்புபோல நைமிசாரணியமே. (10)

சங்கமேந்துசெங்கைமேக மங்களங்கள் தங்கிய
துங்கமானமார்திருந்த சம்பவஞ்சொலப்பினும்
அங்கதானசக்ரதீர்த்தமாடி ஞானமிருகுவும்
பங்கயக்கண்மாலினன்போட ஸ்வமேதபலனுமே. (11)

கொண்டுகொண்டல்மேனிமாயன் கோமளப்பதங்களைக்
கண்டுவாழ்வதாயினன்முன் கன்மபாவவினைகளை
விண்டுஞானமேவுமந்த விஷ்ணுசக்ரதீர்த்தநீ
ருண்டுநீரவாசமான வுத்தமர்க்குமுத்தியே. (12)

சாதுர்மாதம்மாகமாதஞ் சார்ந்தவெள்ளிவாரநல்
லேதுவானபர்வகால மின்னமேற்றநாளினில்
சாதுகோட்டியார்க்கிலங்கு சக்ரதீர்த்தமாடினோ
ரோதுதற்குமரியமுத்தி யுற்றுவாழ்வர்நாளுமே. (13)

இன்னமிந்தவைபவத்தி னியல்புசொல்லவும்மனம்
துன்னவும்மொணுதென் றுரைத்தவேதவியாதனை



மன்னவட்டவங்கமான வடவிழக்கார்க்ஷேத்திரம்
இன்னதென்றவினவு சௌனகாதியர்க்கியம்புவான். (14)

6-வது காலநேமிவதைச்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 78.

---

## பிரமாண்ட புராணம் 78-வது அத்தியாயம்.

## 7-வது வாரணாத்திரிச் சருக்கம்.

### விருத்தம்.

வேகவதிக்குவடக்கிருக்குமோர் [illegible] திகழ்மாமணிசேர்
மாகமளைவமுமானமதின்வட திழைபோசனையு
மாருமிடந்தனில்வாரணவத்திரி யற்புதக்ஷேத்திரமாம்
பூகமசோகுபலாவொடுபுன்னை பொழில்நிறைவின்றதுவே. (1)

காமசரத்தினைவென்றமகத்தவர் கானிலின்றுறையும்
சேமசனங்கள்மகிழ்ந்துபடிந்திடு தீர்த்தமார்கரையில்
தாமசராசமற்றிடும்யோக தவத்துறுகின்றமுனி
ரோமசன்வாழ்ந்திடும்பானை மலைப்புறமோர்நரசிங்கமதாய். (2)

மாபழனிமாறும்விளங்கியொருத்தரு மாற்றவடங்காத
கோபமடைந்துமிர்ந்திருகண் சுடர்கொண்டுறுகின்றபிர
தாபமதைப்பிரமாதியர்கண்டயர் சம்புலையேவவொரு
தீபமிகுஞ்சுடர்பாலொளி மங்குதல்சேர்வதுபோன்றிடவே. (3)

பாதகமேசெயமுக்கணன்வன் சாபத்துருவோடவரி
நாதனிடஞ்செலமண்டியழித்தடல் நண்ணியநரஹரியை
மாதவவன்பர்கள்செய்பிழைதீர்ந்தருள் வாயெனுநற்பிரக
லாதன்மகிழ்ந்திடவேயருளார் வரசிங்கமதாயினனே. (4)

நிலத்தினுயர்ந்திடுமற்புதமா மதூராதிபநேர்ந்ததவ
புலத்தியமாமுனிவாபரமாயுகம் புத்திரனுண்டாக
நலத்தினில்விஞ்சுமட்டாங்க விமானமிருந்ததினானவர
பலத்துருவாகியயானைமலைப் பதிசேர்நரசிங்கனையே. (5)

எண்ணியசுற்றமுற்ற புலத்தியனை திருமகட்கருளி
புண்ணியனுகியநீமனைதன்போடு பூசைபுரிந்துதலம்
பண்ணியவற்புதமானதறிந்தினம் பார்விணிலெங்களுமே
கண்ணியமோங்கியவுன்றனை யொத்திடுகாதலனுகுமென. (6)

சேமனமாதவனேதியவக்கணமேமறைவுற்றிடவே
வாமனவச்சுதவென்றுபுகழ்ந்து மகிழ்ந்துபுலத்தியனும்
காமனகற்றுதிகூறிப்பணிப் பதிநாடிவசித்திடுநாள்
பூமனவர்க்குபிறந்தனனுத்தம புத்திரவிச்ரவசு. (7)

பின்புபுலத்தியன்மேருகிரிப்புகிபேசியறுதியுடனே
யன்புமிகுந்திடவேரசிங்கனைத்தமலுப்பமனியே
லின்பமுறுந்திருமால்பதமேவின னின்னமனேகமதாம்
பொன்பிறழுத்தமயானைமலைப் பலபுண்ணியமெத்தனையோ. (8)

இந்தவிதச்சுபவாரணவத்திரி சேத்திரவின்பமதைச்
சுந்தரமானவைகாசியின் சுக்கிலதுவாதசிபாகியநாள்
சிந்தைமகிழ்ந்துபடித்தவர்கேட்டவர் தியானமுறுமெவரும்
சந்ததம்வாழ்வுடன்மால்பத மேவுவர்சாருவர்மங்களமே. (9)

7-வது வாரணத்திரிச்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் 88.

---

பிரமாண்ட புராணம் 88-வது அத்தியாயம்.

## 8-வது அம்பரீடச் சருக்கம்.

விருத்தம்.

சுருதிசேர்ஞான வடிவமாய்விளக்குஞ்
சுகமுநிதந்தையாம் வியாசப்
பருதியைச் சௌனகாதியரொன்றும்
பங்கயப்பூவெலா மலர்ந்து



திருதிகழ்வ்யூக சுந்தராஜச்
செழுமமுதினையின முன்னைக்
கருதியேநோக்கு மவர்களினுள்ளக்
களிப்புறமாமுநி பகர்வான். (1)

மண்டலமெல்லாம் புகழ்பெறநான்கு
வருணமு மவரவர்செய்கை
கொண்டலங்கார முற்றிடப்புரக்குங்
கொற்றவ மனுநெறியுடையோன்
விண்டலத்தெவரு மகிழுமால்பத்தி
மேவிய வுத்தமசீலன்
வண்டமர்பூந் தேமலர்த்தொடையம்ப
ரீடனென்றொரு முடிமன்னன். (2)

தேசசஞ்சாரமாகி வந்தினற்
றென்னவனாட்டினில் மாலா
கீசனுர்மதுரைப் பதிதனிலுற்று
னெங்கணுமகிழ்வுறக் கண்டான்
வாசமாமலர்ப்பூம் புன்னைகள்கமுகு
மாபலா தென்னைகளோடு
நேசமாமசோகு சம்பகங்கதலி
நேருமுத்யான மாவனமும். (3)

கந்தரமணவுந் தென்றலுமுலவும்
கனிகளெப்பொழுது மாம்பொழிலும்
சுந்தரமான மாடமாளிகைசேர்
தோரணவீதி பற்பலவும்
மந்தரமொத்த குறிஞ்சிவாரணமா
மலைகளு மலர்ப்புனல்நிறைந்த
சந்திரகாந்தப்படித் துறைத்தடமுந்
தமனியவனேக மண்டபமும். (4)

வைகைமாநதியுந் தேவநற்கிருத
மாலையாம் புனல்வளநதியு

முய்குவான்வேண்ட வரந்தருந்தெய்வ
    வுத்தமசன்னிதி பலவும்
செய்களிற்செந்நெல் முப்போகங்கள்காட்டி
    செழிப்புறுங் கன்னலிற்சேர்ந்து
செய்கைகளெல்லாம் நன்மையேகொண்ட
    ஜெனங்களுற்சாகமுங் கண்டான். (5)

கோபுரரத்ன சிகாசமும்படிகக்
    கொடிகளுமாட மாளிகையில்
நூபுரமடவார்கு யிற்றொனியுறவு
    துன்னதிவோர்களி னிடமும்
பாபுரமென்ன ரதகசபரிகள்
    வாரிதியணி வகுப்பாக
வேபுரந்தருளு மன்னவர்குழுவு
    மெங்கணும் வாத்தியவொலியும். (6)

அந்தணரரசர் வணிகர்சூத்திரர்க
    ளார்ந்திடுந்தனித்தனி மனையும்
சந்ததமறையோ ருருச்சொலும்வாழ்வும்
    தானஞ்செய் நவநிதியளவும்
வந்தனவித்யாசாலையும் நடன
    மங்களசாலையுங் கொண்ட
சுந்தரமதுரை வடக்கினில்ராச
    ரிஷிகளார்ந்திருப்பதுந் தோன்ற. (7)

மங்கள்மதுராபுர நடுவதனில்
    வானவர்தச்சனு மியற்று
மங்கனகத்தாற் சதுர்விதவாச
    லற்புதரத்தின சோபை
யெங்கணும்பரவதம்ப தோரணங்க
    ளிலகுபிராகாரமாம் நலங்கள்
தங்கியவட்டவங்க விமானஞ்
    சார்ந்தனனம்ப ரீடனனே, (8)



பூவுலகஞ்சேர்வைகுந்தமாமப்
    பொன்மயவிமான முன்வாயில்
மூவுலகேத்தத் துவாரபாலகர்கள்
    முந்துறவயனும்பர் நிதமும்
மேவுலகத்தார் போற்றுதல்செய்ய
    மேதினி திருவிருபாலும்
மாவுலவுஞ்சீர்கொண்டு வீற்றிருக்க
    வானவர்பூ மலர்பொழிய. (9)

ஏர்பெறும்நடனம் ரம்பையராட
    விந்திரதும்புரு முழங்க
சீர்பெறுமின்ற சனற்குமராதி
    தேவர்செய் பூசைகொண்டுயர்ந்த
பேர்பெறும் வியூகசுந்தரராஜப்
    பெயரொடு கருணையார்மேகம்
தார்பெறும்அம்பரீடனுந் தலத்திற்
    றரிசனமாரி பெய்ததுவே. (10)

மாமணிமகுட குண்டலமதுர
    வசனவாயருள் நிறைகின்ற
தாமரைநயனமா மதிவதனஞ்
    சங்கசக்கரங் கதைசேர்ந்த
சோமளவபயஹஸ்த மெவ்வுலகுங்
    கொண்டுகாத்தருள் திருவுதாஞ்
சேமமாங்கனக வம்பரங்களைக்
    செழுமறைதுளப நூபுரமும். (11)

தூர்ந்துலகளந்து மாவலிசிரசி
    னணியதா யடியவர்சிந்தை
சேர்ந்துநான்மறையும் விதிமுதலோரே
    தேவரும்யோகருந் தலத்தை
நேர்ந்தளவற்றதுழிகாலத்தும்
    நினைப்பதற்கரியதாம் நலங்கள்

சார்ந்தபொற்கமலத் திருவடியிணையைத்
தரிசித்தான் பரவசமுற்றான் (12)

உள்ளினுலுணர்வா அருகினுலுள்ள
முகத்திருசரக்குவித் தெழுந்து
அள்ளினுல் சனனமரண சாகரமாம்
அன்பமேதரும் வினைப்பவத்தைத்
தள்ளினுனிருபாலமர்ந்த செந்திருவின்
சரணத்திற் பருகியதேனை
யள்ளினுனன்பால் மனதினுலருந்தி
யானந்தமாகினு னன்றே. (13)

இவ்விதமாக வடிக்கடியம்ப
ரீடனுந்தரிசனஞ் செய்து
பவ்வியபுளகாங்கித முறுமங்கம்
பனிப்பக்கண்ணீர் நனிததும்ப
திவ்வியமாய் நூறாயிரம்வருடம்
செழுமறை யுபநிடதத்தா
லவ்வியல்பான தோத்திரத்துட
னாதனஞ்செய்துகொண் டிருந்தான். (14)

அவ்வபரயுகத்தில் நாரணன்றேன்றித்
தூயமன்னவ னுக்குற்ற
வவ்வுறவிந்த விமானவுத்தரகீழ்
மூலைநம்மபி மதமான
திவாகரன்பணியும் வாரணத்திரியாஞ்
சேத்திரமதில் வளர்யோகந்
தவாநரசிங்கனருள் பெறுமுரோம
சன்றனியவனிடந் தவனருளால், (15)

நரசிங்கமூர்த்தி பூசனைசெய்தால்
நல்குமம்பதமெனுஞ் சொல்லைச்
சிரசினில்வகித்தா னவ்வனஞ்செய்து
சேர்ந்தனன் பரகதியென்னும்



அரசனுந்தவத்தின் வியாதனைப்புகழ்ந்தே
யற்புதச்சௌன காதியர்மால்
வரசரணத்தின் பெருமையாமமுத
வாரிதியிற்றுளி னகர்ந்தார். (19)

8-வது அம்பரீடச்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் 103

---

## பிரமாண்ட புராணம் 89-வது அத்தியாயம்.

## 9-வது புரூரவர்சக்கிரவர்த்திச் சருக்கம்.

விருத்தம்.

புராதனமாமட்டாங்கப் பொன்விமானத்தார்கின்ற
கராசலங்காத்தமாயன் கலியுகத்தெவரொவர்க்குத்
தராதலமுத்திவாழ்வு தந்தனனெனுந்தவர்க்குப்
பராசரன்புதல்வன்ஞான பண்டிதன்பகரலுற்றான். (1)

சந்திரன்புதல்வன்புந்தி யவன்சுதன்புரூரவச்சாம்
இந்திரனுலகமெல்லா மேற்றிடுஞ்சக்கரவர்த்தி
சுந்தரவூர்வசிக்குத்துணைவனு யனேககாட்சு
கந்தரவசித்தானென்னுங் காதையைவிரிவாய்ச்சொல்வாம். (2)

புரந்தரனவையில்முன்னாள் பொற்புடைமாதரெல்லாம்
புரந்தரக்கடைக்கண்பார்வை புன்னகைபோற்பூண்கள
தரந்தாமாசப்பூண்டு தன்னொளிசிறக்கநல்ல
வரந்தருந்தேவரெல்லாமயங்க வூர்வசியும்வந்தாள். (3)

வந்தவூர்வசியைப்பார்த்து மாதவராசைகொள்ள
விந்திரசபூசிறப்போ டெவர்களுமயங்கிநிற்ப
சுந்தரக்கொங்கைமந்த ஹாசஞ்சோபிதங்கண்பார்வை
சந்திரவதனம்பாத சதங்கையிநொலிசிறக்க. (4)

நின்றவடன்னைநோக்கி நேத்திரத்தமுதுவாய்ந்த
வுன்றனக்கிங்குற்றா யுணர்ந்திநிபாவரிச்சை

என்றனைப்பகர்வாயென்றே யிந்திரன்கேட்கவெட்கித்
துன்றிருமுகத்தைமாற்றிச் சாற்றுவாள்சபையினின்றே. (5)

நற்புருடோத்தமன்றான் நாதனென்றெண்ணிச்சொல்லில்
சற்புரூரவனென்றுற்ற தன்மையைக்கேட்டவும்பர்
கற்பகநாட்டிலார்ந்த காமபோகத்தைநீக்கி
யற்பமானுடரின்வாழ்வை யதுவட்டித்தாளென்றுநக்கார். (6)

அண்டர்கோனிந்தமேலோக வமரரைமறந்துசொற்பங்
கொண்டவாயுளையுற்றானைக் கூறினையாதலால்நீ
மண்டலஞ்சேர்வாயென்ற வன்கொடுஞ்சாபநேர்ந்து
மண்டுகளார்ந்தசெம்பொன் மணியெனமழுக்கினின்றாள். (7)

அப்பொழுதூர்வசிப்பெண் ணமரர்கோனடிவணங்கி
யிப்பொழுதெண்ணமொன்று யியம்புதல்வேறுயிற்று
முப்பொழுதறியுந்தேவா மோசநேரெனக்குன்சாப
மெப்பொழுதகலுமென்று மிந்திரனுக்கதுசொல்வான். (8)

பொன்னுலகனைத்தேநீயும் பூவுலகேகிச்சின்னாள்
மன்னியிங்குறைவாயென்ற வாசகமாற்றானுமன்
தன்னியல்பழியுமாதைச் சனமிலாதிருக்கும்பூமி
தன்னிலேதள்ளக்காற்றுற் றளர்பூங்கொடிபோலானாள். (9)

செம்பட்டுத்தரித்தவர்தச் சேயிழையசோகுபோன்றாள்
கம்பட்டினக்காவீழ்ந்த தொத்தனள்நாகக்கைவ
சம்பட்டமாலையானாள் தன்னினம்பிறிந்தமான்போல்
கும்பிட்டுமருண்டுநின்றே குலைகுலைந்தவசமானாள். (10)

இத்துயர்கொண்ட வூர்வ
சியைப்பெருமயக்கஞ்சேர
நித்திரை யுற்றபோது
நேர்ந்த சொப்பனத்திற்கூட
வுத்தமன்வந்து நங்கா
யுனக்கருள் செய்வோம்நீயுஞ்
சித்தவேகவதிப் பாலாங்
கதம்பநேர் சுகவனத்தில். (11)



அட்டாங்க விமானத்தன்னி
லார்ந்தவச்சுதனு நம்மை
நிட்டாங்கஞ் செய்தவத்தோர்
நேசமாய்ச் செய்நித்தனுமு
னட்டாங்கவத்தை யெல்லா
மொழித்து முன்போலவீவான்
தொட்டாங் கனேகமான
சுகமுடன் வாழ்வாயென்னும். (12)

பரம்புருடோத்தமன் சொற்
பாகினை யுண்டானந்தம்
நிரம்பிட விழித்தெழுந்து
நின்றிடும் பொழுதுவேட்டை
யுரம்பயில்வதற் காக்காணி
லுற்றிடும் புரூரவச்
மரம்பைபோ லாருகொள்ளார்
வசியின் முன்படுத்துவந்தான். (13)

மோகங்கொண்டான் பிரமித்தான்
முரணழிவுற்றான் மோக
தாகங்கொண்டா னயர்ந்தான்
சம்பராரியினம் பார்த்த
வாகங்கொண்டான் சொல்வானன்
னனியை யிழுக்குமின்போற்
றேகங்கொண்டானே நீயார்
சேர்விடம் பேரோதென்றான். (14)

இன்னமுஞ் சொல்வானன்ற
னிடைமொழி கூந்தலக்குழல்
மின்னலோகன்னலோ நீர்
மேகமோ நாகமோவென்
னுன்னினேன் நீசோகங்கொண்
டொருத்தரு மில்லாக்காட்டில்

என்னகாரணந்தா னற்று
யியம்பென வவளுஞ்சொல்வாள். (15)

நாமதூர்வசியதான
நாளும்பரவையிற் சென்றேன்
காமனனும்பர் கோமான்
கண்டெனக்கெவர் மேலாசை
கோமளவல்லியே நீ
கூறுவாயென்ன வெட்கிப்
பூமலர்க்கண்ணனான
புருடவுத்தமனை யெண்ணி. (16)

புகலும்போ தற்தவார்த்தை
புரூரவ னென்றதாலே
யகலென வென்னையும்ப
ரனைவருந் தள்ளிவிட்டார்
புகலிடமில்லையென்று
புகழ்ந்தாயியார் பெருந்ற
சகலமுஞ்சொல்வா யென்னச்
சாற்றுவான் சக்கரவர்த்தி. (17)

பிதாமகனிந்து வென்றன்
பிதாபுதனென் பேருன்றன்
நிதானம்சேர்ந்துறும் புரூ
நின்னிதம்ப்பவுமுறும்
சுதாகறவுன் னும் போக
சுகமுறும் வாழ்வுதன்னிற்
சதாவிருந்திட நினைத்தேன்
சம்மதமென்ன வென்றான். (18)

அப்படிச்செய்யலா மென்
றவனுடன்நகரஞ் சேர்ந்தா
ளொப்பற்ற போகத்தாலே
யுற்றநாளெல்லாஞ் சீரார்



மைப்புயல் வண்ணன் மாயன்
மலர்மகளுடனே வைகுந்
செப்புரிதா மட்டாங்க
விமர்னநற் சேவைசெய்தாள். (19)

நடனசங்கீதத்தாலும்
நாமமங்களஞ்சேர்ந் தோங்கும்
படனகீர்த்தனங்களாலும்
பணிவுதற்கிரங்கியே யன்
புடனகக்காந்த மாலு
முகந்தனன் சாபந்தீர்ந்து
தடனகரான வானஞ்
சார்ந்தனளூர்வசிப் பெண். (2))

சக்கரவர்த்தி யாருஞ்
சார்ந்தநற் புரூரவன் பொற்
சக்கரக்கை யான்பத்தி
சார்ந்திடுமி ருடியாவெட்
டக்கர யோகந்தாலே
யச்சுதன்ப தமடைந்தா
னிக்கரக்கனி யாங்காதை
யெனக்கு நாரதனுஞ்சொன்னான். (21)

இச்சரிதத்தைக் கேட்டோ
ரெண்ணியோர் படித்தோரெல்லா
மச்சுதற்கடியா ரென்றே
யருந்தவவியாதன் சொல்ல
நிச்சலுந்தவஞ் செய்தந்த
நெறிசெலுஞ் சௌனயோக
ரிச்சையாய்க் கேட்கமன்ன
ரியல்பெலா முநிவன்சொல்வான். (22)

9-வது புரூரவச்சக்கரவர்த்திச்சருக்க முற்றிற்று,
ஆக திருவிருத்தம் 125.

## பிரமாண்ட புராணம் 90-வது அத்தியாயம்.

## 10-வது சந்திரகுலவரசாட்சிச் சருக்கம்.

### விருத்தம்.

இந்திரனார்போ லெழிலாமதுரைச்
சந்திரவம்சத்தனி லிலிபாருந்
சுந்தரமன்னர் தொகுதியைப்பேணிக்
கந்தரமால்தாள் கருதியுரைப்பாம். (1)

புத்திமிகுந்த புரூரவனுக்கே
யெத்திசையுஞ்சேர் கீர்த்தியாய்மன்
புத்திரனானவ னதன்பூர்ண
சத்குணோத்தம மலையத்துவசன். (2)

மலையத்துவசன் மேருவெனும்மா
மலையதனோர்தெற் காவியமன்னர்
மலைவுறவென்று மகிழ்ந்திடுதீரன்
கலைகளின்முடிவு கண்டதவத்தின். (3)

அகத்தியனன் குருவாகவேநன்று
நகத்தினிலோங்கு பொன்மேருவில்நன்மை
புகத்தினமார்ந்து சயக்கொடிநாட்டி
சகத்தில்மிகப்புகழ் சார்ந்திடும்வீரன். (4)

பாமதுரைப்பதி மந்திரிசேர
சேமமோடாயிர மாண்டுகள்சேம
மாமறையோருடன் மற்றவர்வாழ்த்த
கோமளமாயரசா ளுகைகொண்டான். (5)

பின்பொருகாலையில் பிரபலமான
அன்புமிகுந்த அகத்தியனற்றான்
பொன்புனைமாமுடி தாழ்த்துபுகழ்ந்து
இன்பமுறும் பலதீர்த்தமதேதென். (6)

தானமுகல்லவுட் டானமுமேசேர்ந்து
ஞானமோடாதினை நண்ணிடுவோர்வி



மானமறைத்தரு வாய்குணசீல
மோனமிகுந்தவ மூர்த்தியேயென்றான். (7)

மன்னவனுகிய மலையத்துவசன்
சொன்னபடிக்குத் தூயவனியும்
நன்னலமானது நாடும்விமானம்
தன்னிலெழுந்தவர் சானவிமுதலாம். (8)

புண்ணியமாகிய புனல்களிலாடி
பண்ணியகன்மை பலித்திடவேகேளை
நண்ணியமாதல காரணனும
மெண்ணியவன்ற னிருசரணத்தை. (9)

பூசனைமா தவமோடுபுரிந்து
நேசமுறத்தினம் நேர்வதிலோர்நாள்
வாசமலர்த்தட மாரிடமாத்தி
வீசிடவேவொளி மேவுவிமானம். (10)

சென்றிடுசோலை யையன்பார்தெரிந்து
நின்றிடவேசெய நிருபனிதென்ன
வென்றவினோத் திடவேயசரீரி
மின்றிகழ்மேகமெனச் சொலும்வாய்மை. (11)

மலையத்துவசமன்னவ வென்சரண
நிலையத்துறுநா புரிவின்றுவரும்
கலையம்மறையோதிய கங்கையுமீ
டிலையென்றமகத்துவ நேருமிது. (12)

புனிதத்திகழ்புண்ணிய தீர்த்தமிதோ
விளிதாகவிருக்கிற தில்வினையில்
கனிவாகியோடிக் கதிரோனால்
பனிவாங்கியதாயிரு பாவமது. (13)

### வேறு.

சங்கரனுமித்தீர்த்த மன்புடனேசடையதனிற்
றரித்ததாலே

மங்களமுற்றனில் கார்பசுபாலையாவுமுத்தி
மன்னுஞ்சொன்ன
அத்தறிரேர்சோமசுந்தர விமானத்திலெமதர்ம
ஞாதிக்க
வெங்கணுங்கொண் டாடிடவேகற்பமதாயெழுந்தருளு
கின்ற வென்னே. (14)

பத்திபுருமாசர்களு மற்றெவருந்தவராமற்
பணிந்தர்ச்சித்து
சித்திபெறும்வாழ்வுடனே முத்தியுற்றாதலினுற்
சிறந்தநீயும்
நித்தியமுமிங்கிருந்து நூபுரகங்கையிலாடி
நேமஞான
புத்தியுடனெனக் காட்செயிகபரநற்சாதகங்கள்
பூர்ணமாமே. (15)

தேன்பாலாஞ்சொல்லை மலையத்துவசன்கேட்டுகந்து
தேகப்பூரித்
தான்பாலாரிடபகிரிச் சோமசுந்தரவிமானத்திற்
சதுர்வேதங்கள்
வான்பாரோர்புகழச் செந்திருமார்பன்மலையழக
வரதன்கானந்
தேன்பாடும்வனமாலை திகழ்பரமநாதன்வனச்
செழுங் கார்போன்ற (16)

வண்ணனையு மதுரைநகரட்டாங்கவிமானத்தில்
வாழுமலர்ப்பூங்
கண்ணனையும் வேதியர்களொடுகூடிப்பூசைசெய்து
கடலாற்குழந்த
மண்ணளினத் தும்புகழ் சுந்தரசேனுவெனுஞ்சதுர்க்கு
மகுடஞ்சூட்டிப்
புண்ணியநற்றவந்தா அற்றன்முத்தியானந்த
போகந்தானே. (17)



கிருபசந்திரகேதுமனுநீதியுடனரசு
நிகழ்ந்தபின்பு
பருவரைத்தோட்சோம சுந்தரசுதன்பெற்றனவ்வரசின்
பாலனத்தை
திருமகுடஞ்சூட்டுதற் காமக்கன்பெறவேநல்லிடபாத்
திரியடுத்து
சுருகுகளைப்புரிந்து நெடுந்தவம்புரிந்தான்மாலழகன்
சரணினைக்கே. (18)

இவ்வரசன்மனமகிழச் செந்திருமால்பிரசன்ன
மாயிருக்கு
மூவிடத்திற்றிருவாலவா யமர்சங்கரனுமையோ
டுற்றதைக் கண்
டிவ்விடத்திலெவ்வரத்தைப் பெறவேண்டிவந்தீர்நீ
ரென்றமாலை
பவ்வியமாய்த்தெரிசனஞ் செய்தாதியதாமுனதருட்கண்
பார்வை நேர. (19)

வந்தனமென்றேயுரைக் குமரனையிதோநிற்கின்ற
மன்னன்றனு
கந்தனைத்தந்தருளுமெனு மச்சுதனேமனங்கொண்டு
கவுரிதன்னைச்
சுந்தரமுமிச்சோம சுந்தரன்றன்மனமகிழத்
தனமென்றேடு
சுந்தரஞ்சேர்பெண்ணாக வவதரிப்பாயென்றபதி
சொற்படிக்கே. (20)

நல்லதெனுமவிருவர் தங்களுக்கும்விடைநல்கி
நீர்ந்திராவுண்
அல்லல்தவிர்த்தீர்ந்தருளும் புத்திரியாமென்றுமறைந்
தான்காவலன்னான்
சொல்லரியமகிழ்வுடனே நகர்சென்றான்மன்னவனுஞ்
சோமசுந்தர

வில்லவனிலுமையும்வைக் தலதரித்தாள் புத்திரியா
யெவரும் வாழ்த்த. (21)

செந்திருவையனையசுதை தனைக்கண்டவன்மேவிதா
சிறந்தபுத்ர
சந்தரனெனவளர்த்தார் பல்வனம்வந்துற்றவுடன்
ரோன்று மூன்று
மந்தரமார்தனங்களைக்கண் டாசுதனையவட்குதவி
மீன்னவன் சோம
சுந்தரனுமுத்திபெற்றான் மும்முலைத்தடாதகைபாரு
சொற்கொண்டாளே. (22)

பர்த்தாவாம்பசுபதி சொற்படியிராசகரிபரியான்
பரவவெங்கும்
கர்த்தாவாய்ப்பிரதாபுற்ற வசுபரிபாலனத்தைக்
காத்தாரின்ற
விர்த்தாந்தத்தெரிந்து இறைதந்தவனையன்றிமற்ற
வீரரோடெ
திர்த்தார்த்துவென்றுதிக்கு விசயங்கொண்டேசெங்கோல்
செலுத்தினனே. (23)

உமைமீனலோசனி யில்விதமாகத்தன்மணங்கொ
ண்டாத்தனாரி
யெமன்வன்னியிந்திரனன் னிருதிவருணன்வாயு
வியக்கர்கோமான்
தமைவென்றுசவுமிய பாண்டியன்முதலாமரசர்களைச்
சமித்திராசனை
மமருமரனைக்கண்டாள் மூன்றிலொருகொங்கைமறைந்
தழுகுற்றளே. (24)

சூலபாணியுமீனலோசனியு மணமங்கொண்டு
சுகமுற்றார்கள்
கோலமிகுஞ்சங்கசக்ரபாணிநேமனத்தைக்
கொண்டேயர்ந்த



சிலைதிருச்சோமசுந்தரன் மகவுபெற்றிடவே
செய்ததாலே
நீலகண்டனாயிடபகிரியிற் றன்னிடதுபுறம்
நின்றவர்க்கும். (25)

வேண்டியவைதந்தருளுங் க்ஷேத்திரபாலகனை
மேவச்செய்த
பாண்டியநற்குலத்தியல்பை வாதராயணன்சொல்லப்
பரமயோகந்
தூண்டியநற்றவமுடைய சௌனகாதியர்புகழ்ந்து
தூயசவுமிய
பாண்டியன்பின்றோன்றினோர்கள் சரித்திரத்தைக்கேட்கமுநி
பகரலுற்றான். (26)

10-வது சந்திரகுலவரசாட்சிச்சருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் 151.

## பிரமாண்ட புராணம் 91-வது அத்தியாயம்.

## 11-வது தத்துவநிரணயச் சருக்கம்.

விருத்தம்.

சதுரானன்முதலோர்பணி தாட்டாமரையமலன்
விதுராதிகருணாலயனை வின்றாரமுநிவிலும்
மதுராற்புதமெனவேசொரு மாயன்றிருவருளால்
மதுராபுரிஸ்ரீ வல்லபதேவன் புரவுரைப்பாம். (1)

பாரார்புகழ்சயசௌமிய பாண்டியன்குலம்வந்தோன்
நேராகியமனுநீதியின் னெறியேசெலுமன்ன
னோரார்ந்தனுநவாகி யிலங்கும்புயவீரன்
காரார்ந்திடுகொடைகண்டபேர் காவுந்தாவஞ்சும். (2)

திருமாலடிமனமேவிய சீலன்பிரதாபன்
மருமாமலர்நிம்பச்செழு மாலைச்சிலைமார்பன்
கருமாமுகிலணவுந்நற வொழுகுங்கனிநேருந்
தருமாவொடுபலசோலைகள் சாருங்குயிலினிகள். (3)

இரதகரிபரியாள்களோ டெங்குஞ்சபரிறைய
விரதத்தவர்மறையோர்முத லெவரும்புகழ்மேவ
வரதப்பிரசாதம்பெறு தேவாலயம்வைகுஞ்
சரதந்திகழ்மதுராபுரி தனையாளுகைகொண்டான். (4)

பகவத்குணபரிபூரண செல்வப்பதிநம்பி
மிகவர்புகழ்குருவாகவே மேவக்கடல்சூழுஞ்
செகவத்சலனெனவே புகழ்சேருங்குணமாரு
மகவற்பொடுபரிபாலன மதுசெய்திடுநாளில். (5)

ஒருநாளிரவினிலேபெரு
நகர்சோதனையுறவே
திருவாளனியொடு மந்திரி
சேரச்சனமார்க்க
திருவீதியொடாறும் வார்த்தைகள்
செவிசார்ந்திடவுலவ
வொருவாசலிலருமாமறை
யோரந்தணனேர்ந்தான். (6)

கண்டானரபதியும் மிவன்
கருதும்விதஞ் சொல்லப்
பண்டாகியவிதிநா னுணர்
பவனென்றுத னுள்ளங்
கொண்டானவனொருகார்த்தியர்
குலமேவிய நீயெங்
குண்டானதோர் டிங்குற்றது
முதலானவை சொல்வாய். (7)

சக்காழி கைகொண்டானுயர்
தாமோதரனடி சேர்
கங்காநதி முதலாகிய
தீர்த்தங்களி லாடி



யிங்கார்ந்தன னென்பேர்சோம
சர்மாவென தார்நற்
கொங்கார்பொழி லவந்திசபு
ரோத்தங்க வுசிதமே. (8)

எனுமவிப்பிர வன்கன்றனை
யிறைவன்மிக வாழ்த்தி
மனமானது கனிவாகவே
மகிழுங் குணமாக
புனிதந்தரு மினிதாம்பர
புருடார்த்த முணர்வு
வினதென்பதை யெனதுள்ளம
தேற்கும்படி புகல்வாய். (9)

வேதந்தினை மோதுங்குல
மெய்யோனுரை செய்வான்
மாதம்பனிரெண் டானதில்
மழைகாலமோர் நான்கு
மாதங்களுங் காங்காரிய
மற்றேரிரு நான்கு
மாதங்களிலே தேடியே
வைத்துக் கொளவேண்டும். (10)

இரவுக்குண வதனைப்பக
லினிலே கொளவேண்டும்
நரையுற் றகிழந் தக்கிள
மையிலே நிதிநன்னி
திரவச்செயவேண்டும் மிக
நேரொவ்வன மதிலே
பரவச்சொலவரி தாம்பரம்
பார்க்குந்நெறி வேண்டும். (11)

வேறு.

வல்லபதேவ மன்னவன்மகிழ
மறையவனோதிய வார்த்தை

நல்லறமாமென் றெழுதினான்மனையில்
நன்னினான் மதுதினைக்காலை
சொல்லர்தான நித்தியகருமஞ்
சுருதியின் முறைப்படிநடத்தி
மல்லலந்தடந்தோள் நிம்பமாலிகையும்
மாமலியாரமு மிலங்க. (12)

மகுடமின்னிவீச மாமதிவதனம்
மந்தகாசத்துடன் முன்னோன்
நகுடனுமெனவே மதியாலோச
னைப்பெருஞ்சோதி மண்டபத்தில்
புகுமெனவந்து சதுமறையுணர்ந்த
பூசுரரொடு புரோகிதராந்
திகடவச்செல்வ நம்பியும்வரவே
செய்துசிங்காசனஞ் சேர்ந்து. (13)

வந்தனத்துடனே யஞ்சலிசெய்து
மாமறையோர்களே யிந்தப்
பந்தம்விட்டொழிக்க முத்திசாதகமாம்*
பயனுறுமமுத நேர்வார்த்தை
தந்தருள்வீரென் றுரைத்தனஞ்செல்வ
நம்பியாசிரியனு மங்கே
வந்தநற்றலத்தோர் சாத்திரங்கற்றோர்
மற்றுளபண்டிதர்க் குரைப்பான். (14)

தத்துவமானநிரணயஞ் செய்யத்
தடைசெயுந்திய கொடுமோக
தத்துவமிந்தப்பவத்தினை யொழித்துச்
சற்குணமுத்தியிற் சேர்ந்தே
வுத்தமப்பிரமந்தனை யறிந்திடுவா
னுபாயநற் றவமுதலான
சித்தியைச்சொல்வீரென வாசனையிற்
சேர்பெறச்சொன்னதைக் கேட்டார். (15)



தங்கடங்கட்கு வேண்டியதான
சாத்திரப்படி தெரிவிக்கு
மங்களமற்ற வற்புதஞ்சேர
வசரீரிகூறிய வசன
முங்களுக்குண்டாஞ் சமுசயந்தீர
வுன்னுதற்கிட மிலாப்பொற்ற
ளங்கனிக்கியாசுல்கஞ் செய்ததிலே
நமதுசையங்களைச் சேர்த்து. (16)

அற்புதமாக்கினைத்து நான்மறையி
னரும்பொருட்டுவ மறிந்த
விற்பனர்தங்கள் சிந்தையிலெண்ணி
விளப்புதல்தெரிந்து கொள்ளென்று
பற்பலவாக வந்தரவானி
பகர்ந்ததைக்கேட்டுள மகிழ்ந்தான்
கற்பகோட்டைபொருந்த மாமதுரைக்
காவலன்வல்லப தேவன். (17)

மதியுறக்குருவாந் செல்வநம்பி
மகிழ்ந்திடவமைச் சர்களுடனே
துதிசெய்தநல்லோர் யடியனென்றனக்குத்
தோன்றிய சமுசயந்தீர்த்து
அதிபெறநான் விசாரணையாலே
காட்டினாயென்றனும் நம்பி
பதிசயித்தாசன் விடைகொண்டுதன்ற
னணிபெறுமாளிகை சேர்ந்தான். (18)

பொன்மயமாமட்டாங் கவிமானப்
பொற்புறவல்லூக சுந்தரற்கு
நன்மைசேருறவைக் கனவுமுறுக்
காடியேயறு செய்வித்துச்
சொன்மயமேவு வயிணவதியா
ராதனைகபமது நடத்தி

வின்மகுடச்சக்கரக் கரமாலை
மிகவுமேபிரார்த்தனை செய்தான். (19)

ஒருமனதாகமூன்று நாளுங்னி
யுறங்கியசெல்வ நம்பிக்குக்
கருமுகில்வியூக சுந்தரராசன்
கனவுறத்தரிசனந் தந்து
சுருதிகள்புராணமிருதி யிதிகாசஞ்
சொல்லிய பொருளதாநம்மை
மருவியபத்தர் மனமலரதனில்
வசிக்கின்ற மாதவனாலே, (20)

அவர்களாலாதி நிரணயமாமொன்
றருளிச்செய்தானபின் விழித்ததச்
தவரிலாச்செல்வ நம்பியுமகிழ்வு
சார்ந்திடவெழுந்து சித்திரப்பொன்
நவமணிப்புரிசை யரண்மனைசென்று
ராசகற்பக மதைக்கண்டு
பன்மறவுற்ற சொப்பனந்தன்னைப்
பகர்ந்திடக்கேட்டவன் மகிழ்ந்தான். (21)

அப்பொழுதரசன் குருவினைவணங்கி
யமைச்சரைக்கூவி நீரன்புற்
றிப்பொழுதேகற்ற தத்வநிருணயந்தனை
யியற்றுதற்கிக் குருநாத
னெப்பொழுதெந்த வேலைசெய்தாலு
மிணங்குமினென்றதற் கிசைந்து
முப்பொழுதறிந்தசெல்வ நம்பியின்வாய்
மொழிப்படி மதிவலார்சேர்ந்து. (22)

பதினாலுகோடி திரவியங் கிழியாய்ப்
பண்ணியேயாவரும் வாழ்த்த
மதிரோன்கதானமறை யவர்கொண்ட
மந்திரஞ்சாத்திரம் யோகம்



அதிநலவைதீர்வுதத்திரவுடனே
யமலனுகாரணன் றனையும்
விதிநானமுகத்தனுடன் வானிமேவு
விடையனம்பிகை யொடுமேகன. (23)

முப்பத்துமூன்றுகோடியார் தேவர்
மூன்றாடனுங்குறுமிருடி
யொப்பற்றவட்ட மருத்துக்கள்வசுக்க
ளோர்க்குமேகாதசருத்ர
ருப்பதந்தானவ வாதசாதித்தர்
கறுத்தெண்ணாயிர முனிவர்
செப்பரிதான பூசனைபுரிந்தா
லாக்கனஞ் செய்தனரன்றே. (24)

அவ்விதச்சுல்க்கந்தன்னை யாகாயத்
தசைவிலாவண்ணமாய் நிறுத்திச்
செவ்வியதானதத்வ நிர்ணயத்தின்
சீர்பெறச் செய்ததுகண்டு
பவ்வியமாக வரசனுஞ்செல்வ
நம்பியுமந்திரி பலருந்
திவ்வியமிகுந்த சிழிவினையிகவுந்
தெரிசனஞ் செய்தருட்கொண்டு. (25)

தேசதேசத்தார் கல்வியிற்சிறந்த
சிகாமணிகளுக்கும் வேதியர்க்கு
மிராசராசருக்குந் தூதரையனுப்பி
யிதமுறவந்தபி னரசன்
நேசமாஞ்சபையி லாற்றநற்சில
திறைந்திடுவோர்களை; நீங்கள்
வாசமாந்தத்வ நிருணயஞ்செய்து
மகத்துவப் பரத்துவங்காட்டி. (26)

இந்தநற்சல்க்க கிழியினையெல்லா
மெடுத்துக்கொள்ள டேகுமென்று

வந்தனத்துடனே கூறிநல்லாய்மை
வரவெதிர் பார்த்திடுஞ்சமையா
மிந்திராதியர்கள் பணியுமட்டாங்க
விமானத்தி லேவியவ்யூக
சுந்தரராஜ னன்பொடுவினைத
சுதனையுஞ்சேனை நாதனையும். (27)

பார்த்துநீர்சென்று வில்லிபுத்தூரிற்
பைந்துழாயலங்கலோ டணியவர்
கார்த்திகழ்மேகமென்ன வாவிலேயிற்
கண்வளர்நம்பதம் பூவைச்
சேர்த்தநுதினமும் பூசைசெய்விஷ்ணு
சித்தனென்றோங்கிய கருணைப்
பூர்த்தியார்விப்ர குலத்ததிஞான
பூரணனாற் பெரியாழ்வார். (28)

சொப்பனந்தன்னி லிவ்விடத்தார்ந்த
கருதியின்வார்த்தையைச் சொல்லி
யொப்பனையாக விரண்டொருதினத்தி
லொல்லுநர் சூழ்ந்திடவந்து
செப்பரிதானசபையுளோர் மன்னன்
தெரிவுறப் பரத்துவந்தன்னை
யெப்புவனத்துநிலை பெறநாட்டி
விந்திரனவனா னேற்க. (29)

கலியுகந்தன்னி லுய்ந்தநுங்குத்த
காரருந்தூர்த்த நாத்திகரும்
நலியும்வேசனையார்நுதர்க் கருந்தவ
ஞானருனியர்களு மினம்
மலியுஞ்ஞான வேடதாரிகள்பா
ஷாண்டிகள்கர்மிகள் மிண்டர்
பலியுணும்பசாசர் கெடுதலார்மற்றும்



பாவியரனைவரு நடுக்க. (30)
வேதசாத்திரத்தோ டனேகநற்புராண
வெழிற்பிரசங்க மதனிலே
நாதனைரொலியாய் நத்வநிர்ணயத்தை
நாயிருக்கியற்றுவோ மென்றெம்
பாதநூனானவிஷ்ணு சித்தேத்திர
பட்டனையழைத்துவா வென்னும்
பீதகவாடைப்புயல்விடை பெற்றான்
பெரியபொற்றிருவடி தானே. (31)
நன்னலமாக வெழுந்திவேக
நண்ணியவாயு பின்வாங்க
மென்னடையன்னம் பயில்பணைசூழ்ந்து
வேதவாய்த்தனர் வாழும்
மின்னணிமதிலார் வில்லிபுத்தூரில்
மேவியால் பாற்கடலாக
மன்னியயோக நித்திரைசெய்யும்
வடபெருங்கோயிலான் பாதம். (32)
தெரிசனத்துடனே யஞ்சலிசெய்து
சேனையர்கோனுடு வாழ்த்தி
விரிசனைத்தீர்த்தருள் முகில்பாந்தாம்
மேவியவாறெலாம் விளம்பி
யரிசனகாதிக்கரியதா நல்ல
வனுமதிபெற்றி ரதம்மா
பரிசனநெருங்கும் வில்லிபுத்தூர்வாழ்
பட்டராம்விஷ்ணு சித்தருக்கு. (33)

அற்புதமால்சொற் சொப்பனங்கட்ட
வானந்தமாகியே யெழுந்து
விற்பனவேதகுலத் துதித்தோங்கும்
மேன்மையான் மறைநினைக்கலே
பற்பலவான நித்தியகருமம்
பண்ணிநல்வட பெருங்கோயிற்

சற்பமேற்றுயில்வோ னடிபணிந்தன்பார்
  தரிசனத்துடன் றானிசெய்து. (34)

தென்னவனிரவிற்கண்ட சொப்பனத்தின்
  சேர்மையை வணக்கமதாகச்
சொன்னதையவ்விசரித்து நீயினிதே
  சகமுறவடியா ருருட்டுனே
நன்னலமான மதுரைமாநகரம்
  நண்ணிநீ வல்லபதேவ
மன்னவமனைக்கத் தாலவிர்ணயத்தை
  மகிழ்வுறச்செய்து வாவென்ற. (35)

சோனந்தனைக் கேட்டச்சுதனரு
  ளித்தியஞ் சாத்துவதன்றி
மாயமறைப்பொருளி லற்பமுமறியேன்
  மதுரைமன்னவன் சபைதனிலே
நாயனவல்லோர்களை வெல்லவென்று
  கற்பாதத்துவத்தினை நாட்ட
நூமறைவென்று வாருதோவென்று
  நுதகமனும் பெரியாழ்வான். (36)

வடபெருங்கோயிலா னுளமகிழ்ந்து
  மறையவர் சிகாமணிமுதலே
திட்முடன்மதுரை மன்னவன்சபையிற்
  சேர்ந்திடுங்குதர்க்க வாதிகர்க
ளட்கிட வேதசாத்திரபுராண
  மனைத்தையுங் கொண்டதிற்றேன் றிப்
படணமாபரிக்ப காரணமமைப்ப
  பரத்துவங்காட் டிவாவென்னுர். (37)

அநுமதியதனைச்சிரசினிற் கொண்டே
  ஞானத்தமுற்றிடும் பெரியாழ்வில்
மதுவிரதிபுனட்டோரன் மதுரைமாநகர
  மன்னவன்கடற் புதியதனிற்



ஞனும்பெரியோர்க்குத் தெரிவிக்கவாபோர
  ஞய்மையோடொழுக்க மேர்ஞானத்
தநுவுடைச்செல்வ கடமிகாத்தாகர்
  பற்றொடும் விள்ளிபுத்தூர்ச்சகே. (38)

விடுத்தனனந்த நப்பியுர்கந்து
  கிட்டுதித்தனறினை வாழ்த்தி
படுத்தனன்றெழுந்து வெல்லுதிரணப்செய்
  தருளப்பொற் கோபுரப்புரிசை
யுடுத்தநன்மதுரைக் கெழுந்தருள் கருணை
  புனைமுறைப்பிரார்த்தனைத் துதியாற்
றொடுத்தனன்கேட்டுப் பட்டர்கோனவைத்திற்
  றுயில்புவனநாட் டிரைந்துண்டு. (39)

கந்தரனேவ வொருத்திட்டடியார்
  கழல்தொழச் சாவனன்றாதர்
சுந்தரச்செல்வ கப்பியின்றொடர்ந்து
  கோதற்ற செய்திடவருங்கல்
மங்கைக் கோனாள் வல்லபதேவ
  மன்னவன் றெரிந்தனைப்பிகவு
சுந்தரசபையோர் சூழ்ந்திடப்பிரியோர்
  கண்டெதிர்கொண்டனன் சிறந்தே. (40)

அர்க்கபாத்ய சமனியங்கள் தந்தே
  ராசதந்தனை மலரில் விழுந்தெழுந்தே
பார்க்கவினைத்தன்ட தாமரைப்பூப்போ
  லவர்ந்துமுகமுகம் விகசித்து
சர்க்கரைப்பாயத் தரிசனமமுத
  தந்தனைப்பருகி யாசித்தல்
சொர்க்கவித்திரனற் பிரமனேய்மரர்
  சூழ்ந்தெதிர்கொண்டதுபோன்ற. (41)

சேத்திரத்தடக்காவனந்தபாஞ்சம்
  திறைத்தகத்தை திரக்குளித்துத

தோத்திரத்துடனே யிராசமர்பாதைச்
சபமுறச்சனங்களை விலக்கி
யேத்திரக்காரர்முன் செலச்சுருட்டி
வெண்குடைசாமர மிரட்டச்
சாத்திரப்படிக்குச் சிறப்புகள்நிரம்பச்
சகலவாத்தியங்களு முழங்க. (42)

மதுரைமாநகரி லெழுந்தருள்கின்ற
மன்னவதிகா மணிபால
சதுரமாவேதவிண்டு சித்தனையாள்
சந்திரமண்டல மார்க்க
வதிரமணியமாம மாளிகைமீ
வடிவபோடிருந்திடச் செய்து
மதுரவாசகனும் வல்லபதேவ
மன்னவன்சபைதனிற் சேர்ந்தான். (43)

11-வது தத்துவ நிர்ணயச்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 191.

## பிரமாண்ட புராணம் 92-வது அத்தியாயம்.

## 12-வது விஷ்ணுசித்தன்கிழிகொண்ட சருக்கம்.

விருத்தம்.

வேதவியாதன்சொனசாதி வித்தகர்க்குரைத்திடும்
நாதவிஷ்ணுசித்தர்மூர்த்தி நாரணன்பரத்துவம்
மாதிதென்றதைப்போதுணர்ந்தகூடலழகர்தம்
பாதபங்கயங்களைப் பணிந்துகூறுவாமரோ. (1)

வில்லிபுத்தூர்மேவுநாளை விண்டுசித்தனையர்களுஞ்
சொல்லவொண்ணவிபதான ஆயபத்தராத்திட
கல்லதாந்தனத்தினீதி ராசபேட்டிசெய்யவே
செல்வமாலபதத்தினைச் சிந்தைதன்னிலெண்ணினான். (2)

தீர்த்தமாடினை பீதாம்பரந்தரித்துமே
ஊர்த்வபுண்டரங்கள்சாத்தி யுற்றவட்டவச்சரஞ்



சேர்த்தமர்நிரஞ்சொலிச் செல்லுகின்றசேனையைப்
பார்த்தபேர்கள்கண் மனப்பற்றவேகினரோ. (3)

வரவுகேட்டராசவல்லபன் மகிழ்ந்தமைச்சர்கள்
கரவொழித்தசபையினோர்கள் காமம்விட்டஞானமே
விரவுகின்றஞானயோக மேன்மையோர்கள்மற்றவர்
பரவுசேனைசூழவந்து பார்த்துளங்களித்தனன். (4)

சொர்ணபூர்ணகும்பமோடு தோத்திரங்கள்செப்பிட
கர்ணபூஷணங்களார்ந்த கவிஞர்வாழ்த்தகாண்டெனும்
வர்ணமாமனோர்போற்றி நிற்கமகிமையுற்றதத்துவ
நிர்ணயஞ்செய்வித்திடென்று நிருபனும்வணங்கினன். (5)

பத்தியோடுபூசைசெய்து பதுமராகரத்தினஞ்
சித்திரஞ்சிறந்திலங்கு செம்மையானசபைதனில்
முத்திகாட்டுவிண்டுசித்த மூர்த்தியைத்துதித்துயரும்
புத்திமான்கள்சூழ்ந்திருக்கப் புனிதமானவாசனம். (6)

தத்துபட்டநாதேவரீர் பரத்வதத்துவ
மித்தவண்ணமென்றதற் கிசைந்தநூல்சொல்லீரெனும்
அந்தவார்த்தைகேட்டுவிஷ்ணு சித்தனச்சதன்பதம்
சிந்தைபண்ணிகொஞ்சகால தியானமேவினனயோ. (7)

அரசபூபனோதுகண்டோ ரச்சமுற்றமாற்றவச்
சிரசதானசெல்வநம்பி தன்னைநோக்கியேசய
முரசகேர்க்கப்பட்டகாத மூர்த்திபிந்தமௌனமாஞ்
சரசமென்னசொல்லுமென்ன வாரியன்பின்சாற்றுவான். (8)

மண்டலத்தின்மன்னவிஷ்ணு சித்தனாகிவந்திக்
கொண்டல்வேதசாத்திரக் கொள்கையாருமாரபுனை
துண்டிலங்குமணிபதாமி னூற்றுவித்துவச்சபைக்
குண்டலத்திரஞ்சவே பிரசங்கவோசைகொள்ளுமே. (9

ஆதியானதெய்வமின்ன தென்றுசிலவற்புத
நீதியாம்பரத்துவத்தின் நிர்ணயத்தைசெப்பனும்

சொரூபாகநின் றமரிசெரிய கல்லமுதமுள
மிகிலாதவெஞ்சமார்க்கு தெளிவுஞானமாகுமே. (10)

இராமாநுசன்மகிழ்வுகொண்டு நல்லதென் றசபையிலோர்
நிகழ்ந்தாள்கலவிப்பிரர் தம்மைநோக்கியே
மெய்வாசகக்குலத்தி லிரணயஞ்செய்திப்பிர
காசகலகமிறுதி கலைகளெல்லாம். (11)

நான்றுகாலமென்சொல்காதி மேற்கழன்னமுற்றவர்
நன்றுநன்றெனச்சொன்னார், கதைகர்மகர்மாமிகள்
அன்றவன்பதஞ்சவார்கள் தோன்றுசார்வகாள்முனம்
நின்றகாபிலாள்பாளுதாளர் மற்றயாவரும். (12)

நூதவாக்கிதர்சமணயன்யார் மகத்கர்சருவாத
தெய்வமிதாயமெனச் செப்பியச்சூரகைலோ
ருபுவகற்குரன் குதிட்டி யுற்றசல்கமேலுறை
செய்தவழிவாதமீர்த்த பஞ்சைனத்தெறித்ததே. (13)

கண்டவக்கவிதாதெய்வ மாமகத்கர்காருதல்
நுகாண்டசிதைதயாயத்தலை குனிந்துவெட்கமுற்றனர்
கொண்டர்கூழமகிமையான சதுக்காவிலுற்றிட
வண்டர்வாழ்த்தவிக்குறுசித்தவை மகிழ்ந்துகூறுவான். (14)

வேறு.

சகலசாத்திரங்கள் வேதாகமவைபுருடசூக்தம்
புகலுமுற்சுரியவாதி புராணமோமடிதிகாசங்கள்
பகவிமாவயனமபட்சம் பகின்ன்குருவைமற்ற
வகலவண்டாபிரமாண்டங்க ளாறுதலுயர்வனைத்தும். (15)

சிவனயன்வலாரிபாதி தேவர்கள்மகிமைசித்தர்
வக்கிரகர்சிருற்ற நாற்றதெனனுபிரதிசா
தவமுனிக்கணங்கள்யோகர் தாபசகமாகன
புவனகாரணாத்வமேபாதிகள்பூர்ணத்தோடும். (16)



ஆரணப்பொருளதாகியனைத்தையும்படைத்துக்காக்கும்
காரணனாழியூழிகாலத்து மழிவிலாத
பூரணபிரமமென்னப்புகழ்ந்திடப் பணிதற்கேட்டா
காரணனேபரத்வமென்றதைநாட்டினனே. (17)

சாதுக்கள்மகிழ்ச்சொன்ன தத்துவநிர்ணயத்தை
ஏதுக்காரினிமையாகி கன்னல்தேனுண்டதானார்
வாதுக்குவந்தோர்வேறு மாற்றஞ்சொல்வதற்குநாணி
யேதுக்குவந்தோம்நாமென் றிறைஞ்சியேதலைகுனிந்தார். (18)

பின்னுமப்பட்டநாதப்பெரருளாளரோதும்
மன்னுமெவ்வுலகுமார்ந்த மாதவன்நாரணன்றன்
தன்னையேபூசைசெய்ய பூர்வகாண்டத்திற்சாற்று
மின்னமவ்வர்ச்சனைகல் யாணகுணங்களெல்லாம். (19)

மர்மகாண்டத்திலும்ம் மாதவனுலகளிக்கும்
நிர்மலனென் றுநாராயணனுடைய இடதநேர்ந்த
தர்மசாத்திரத்தினீதிதன்னிலு மெடுத்துக்காட்டி
பிர்மத்திலுபதேசத்தாற் பெரியாழ்வாருளிச்செய்தார். (20)

சுரத்திற்சங்காழிகொண்ட காரணனாரணன்றன்
பரத்துவமொன்றேயென்று பத்திரிவையில்வனைந்து
வரத்தினிலுயர்ந்தசான்றுமூர்த்திகள்வலாரிவானோர்
சிரத்தினிலார்ந்ததெய்வத் திரவியக்கிழிமேல்வைத்தார். (21)

வைக்கவுமதனிலானகனமுறும் வானோரெல்லாம்
மிக்கவுமகிழ்ந்தேயிந்த விண்டுசித்தன்சொல்தத்வந்
தக்கதென்றுணர்ந்தித்தார் சார்ந்தசரீரியின்ப
மிககெனவாதிமூலமிது வென்பதுறுதியாமே. (22)

என்றதைக்கேட்டாங்கார்ந்த வெவர்களுந்தேவரியாரும்
நன்றெனச்சம்மதிக்க நான்கொடிபத்துக்கோடி
நின்றநன்னிதியையெல்லாம் நீதிசேர்பட்டர்கோனுக்
கன்றுசம்மானம்பண்ணினார்கள் தாங்ளிமுழங்க. (23)

வானவர்புஷ்பமாரி வருடிக்கவாத்தியங்க
ளானவையெலாந்தொனிக்க லற்புதங்கண்டுநல்ல

மானவேற்கரத்தனை வல்லபதேவமன்னன்
ஆனந்தமாகிச்செல்வநம்பி யோடமைச்சர்வாழ்த்த. (24)

விண்டுசித்தன்பதத்தில் வீழ்ந்தெழுந்தருகிலேத்தத்
தொண்டுகொண்டுயர்ந்தானை [illegible]
லெண்டிசையுள்ளோர்போற்ற வெழுந்தருள் [illegible]
குண்டலகடகமாதிக் கோலமாபரணஞ்சாத்தி. (25)

கனகவம்பரமிலங்கக் [illegible]
தினகரசந்திரன்போற் றிகழ்ந்திட [illegible]
மனகினையலங்கரித்தா ரச்சபையுற்றாவ
தனகனவாகனங்கள்சூழச் சத்ரசாமரபிராட்ட (26)

ஆரசருக்கணமான வாடையாபரணமின்ன
முரசமார்வாத்தியங்கள் முழங்கவேபட்டமுற்று
கரசயிலத்தில்நீரா [illegible]
[illegible]சேனை சார்ந்திடமிகச்சிறப்பாய். (27)

நகர்வலம்வந்தபோது [illegible]பொறுமைகொண்ட
சகலரும்பெரியாழ்வாரைச் [illegible]
புகலுதற்கரியவித்தப் பொருளைக்கொண்டே [illegible]
[illegible]தோற்றினுல்விடுவோமென்றார். (28)

வேறு.

பட்டர்கோனுமவரிட்டமானபடி பார்த்திடப்பரதத்தல
கிட்டவாகிமதிதொட்டமாட மதுராபுரச்செழியனே
ரட்டவங்கமதிலட்டவக்கர விபூஷசுந்தராசனைக்
கட்டவெண்ணுமகிழ்தட்டவேவிரண கிரீடகுண்டலமிலங்கவே. (29)

சங்கமாழிகதைதாங்கவாளினொடு சார்ங்கமார்ந்திடுகரங்களுந்
தங்கமாமணிகளங்குலேர்களை சவுந்தரத்திருமார்பமுந்
திங்களுடுகமலங்களார்ந் திலங்குசீர்முகத்திருநயனமுந்
துங்குலென்னுமொசிரங்கமானது மரகதத்தொளிசிறக்கவே. (30)

மந்தரத்திருநான்குதோள்களு மன்னவாபரணமின்னவே
அந்தரச்செழுநாபியெவ்வுலகு மார்ந்தநாய்மையிருமுதரமும்



மந்தரத்தெழுநகைதராபுரவளி திகழ்ந்ததிருவடிகளுந்
சுந்தரத்தெழுமின்னல்போன்றிடு கனகவம்பரமிலங்கவே. (31)

சேனைநாதன்முதலானபக்த சிகாமணித்திரள்கள்சூழவே
சோனைமாரியெனத் [illegible] அருந்தோதிகூடவே
[illegible]யுந்தாகருடத்திருப்புசம தாரக்கொடிராவியென்னவே
யானைமீதுவருபட்டர்கோனை திரிலற்புதக்கமிருக்கவே. (32)

கூடல்நன்னகரவிபூஷசுந்தரராசகோமளமாமுகில்
தேடவெண்ணவரிதானசோதிமய சேவைதந்திடவின்னவிலங்
கூடருஞ்சதுமுகனுருத்திரன் சுற்றலத்தர்மருத்துவ
ரோடலங்கிருதமென்னராதியர்கள் உம்பரானவரனைவரும். (33)

பாரிசாதமலர்கொண்டு தூவியிருளைபவத்துதிபண்ணியே
வாரிசத்திருவடிபணிந்துகார வாத்தியங்களுமுழங்கவே
பாரிலானவனேகரும்பரம பத்தருமியசெல்வநற்
சீரிலாங்கியநம்பியுங்குண சீலமார்தவர்சூழவே. (34)

மந்திரிமார்களொடுபெருமை கன்னகரமன்னன்வல்லபதேவனுஞ்
சந்திரிகாதவளமார்த்தார்த்துமுறு தன்மைபோலுருகிமாமனை
விந்திரியாதிகள்பரவசங்கொள வெழுந்துமாதவதிவ்யசு
வுந்திரியக்கட்டலாழ்ந்துவந்தனனுபர் பிரதட்சணம்வந்துமே. (35)

அந்தவேளை தனில்சந்தனுதிதருவார்ந்த தென்புதுவைமாநகர்
[illegible]மனனிந்தமாலழகன் வடிவுகண்டுமகிழ்வாகிய
சிந்தையாகியானந்தபாஷ்பமொடு சேவைசெய்துசதுமாமறை
விந்தியாதியர்கள்வந்தனஞ்செய்வு மெண்ணவுஞ்சொலவுமரியதாம்.

செய்யதாமரைநயனமாலினுபர் திவ்யமங்களவிக்ரகம்
கையபேயிதமதிர்த்திடிநேருமது நாடுதற்கிடமின்றிவாழ்
வுய்யவேமனதன்பினேடுகல மோங்குமங்களசாசனம்
செய்யவேகுபலாண்டுமாமறை விண்டுசித்தன்விளம்பினன். (37)

மல்லடர்த்தபுயமாழிசங்கு திருமார்புசேவடிகார்மேனியும்
கல்லதாகுமி[illegible]மங்களங்களை நவின்றவர்க்கெதிர்நின்றுமால்

சொல்லுவிருமதிட்டமானதை கூபங்கொளத்தருவோமென
வில்லிபுரியுறுபட்டர்கோன் மகிழ்வுமேவியேயரப்பேவனவொன்.()

தேவதேவசகாதகாரண சதுர்த்தனுவாரதமாயபின்
சேவடிக்கமலவாருதிருக்கு முதிசெய்துவாழ்ந்திடவேயருட்
மேவவேனுமெனுமவனை நோக்கி யானியூகசுந்தரன்வல்லப
தேவராசனுறுசபையிலார்ந்த மணிசேர்ந்தமல்லமணிமண்டபம்(39)
தன்னிலுயர்ந்தனதுசிங்காதனமின்படி சருவகாலமும்வசிக்கவே
யென்றும்வார்த்தையதுசொல்லியே பிரமனிந்திராதியர்வாழ்த்துதல்
அன்னமேமறைவுசெய்தபின் னவருந்தோத்திரஞ்செயவானமேல்
மன்னுபட்டணநகர்வலத்துடன் வந்துவல்லபபாண்டியன். (40)

வேறு.

அலங்கிர்தமாந் தன்னரன்மனையதனி
லன்பொடுமிலகுரத்தினங்கள்
துலங்கியசிங்காசனத்தினிலிருத்தி
சுந்தரத்தேவியோடியர்ந்த
நலங்கிளர்க்கோங்குர் தெரிசனஞ்செய்து
ஞான வானந்தமாகி
யிலங்கியபூசை யியற்றியபேர்மை
யெம்புதற்கெவர்கள் வல்லவரே. (41)

துமணியப்போர்வை யாரமாபரணஞ்
சாத்தியெவ் வுலகினுமேச
ரமணியமான சோபிதமுடனே
கவிதைப்பெருக்கமுந்தந்தே
ரமரருப்பாரறு மன்னருந்து
யரவருமற் றெவர்தாமும்
கமழ்வனசத்தார் விண்டு இந்தன்றன்
கழற்றுதிசெய்தனர் மிகவே. (42)

வல்லபதேவ மன்னனுஞ்செல்வ
நம்பியுமகிழவுறப்பத்தர்
நல்லவர்விசிறி சாமரமிட்ட
ரத்தினச் சிவிகையின்கீது



சொல்லரிதான பட்டர்கோனவரும்
தோத்திரஞ்செய்திடக் கொண்டு
வில்லிபுத்தூருக் கெழுந்தருள்சேவை
மேன்மையைக்கண்டவர் பெரியோர். (43)

மங்களமாகவந்து தென்புதுவை
வடபெருங்கோயில் வாழ்கண்ணன்
செங்கமலப்பொற் றிருவடிதொழுது
சீர்பெறுமதுரையிற் சென்றே
யங்களவற்ற சமயவாதிகளோ
டெதிர்த்தநாத்திகர் வெருமதத்தர்
தங்களையெல்லா மருமறைப்புராண
சாத்திரந்தன்னினாற் சயித்து. (44)

உன்னருளாலே பரத்வகாரணனு
மொருவனென் றறுதியாய்க்காட்டி
தென்னவன்மகிழ வியூகசுந்தரபால்
தெரிசனந்தந்த தோடனேக
நன்னிதியெல்லாம் பெற்றனனென்று
நவின்றதற் கச்சதனுகந்து
சன்னிதியெல்லா மன்னியமாக
சார்பணிசெய்வருள் செய்தான். (45)

அற்புதமான திருப்பணியெல்லா
மச்சதனுளங் கொளச்செய்து
பற்பலவான மங்களமுடனே
பட்டர்கோன் வாழ்ந்திருந்ததும்
நற்பலங்கொண்ட விச்சரிதத்தை
நாரதன் கூறினனென்று
விற்பனவேத வியாசனுஞ்சொல்லி
மேலுமவ்விதத்தையும் பகர்வான். (46)

வண்ணமாமாட மதுரைமன்னவனும்
வல்லபதேவ பாண்டியன்றன்

சொன்னாரந்தவ நிர்ணயஞ்செய்த
வெங்கனற்பட்டர்கோ னிருந்த
புண்ணியசபையின் மன்னமண்டபத்தில்
பொற்புறு வனதரமேக
வண்ணனோவியூக சுந்தரான
மாயனையன்புடன் மகிழ்ந்து. (47)

தெரிசனஞ்செய்தே யருந்ததிபனைய
தேவிமேயாடற்புதபூஜை
புரிந்தாற்றவருஞ்சேர் செல்வசன்னப்பி
புரோகிதன் றிருவருட்பெற்றே
நரிசரனத்தைச் சிந்தைசெய்தனேக
வாண்டராசனுகஞ் செய்து
விரிகடலுலகும் வானமுங்கீர்த்தி
மேவிவாழ்வாகியே யிருந்தான். (48)

இப்பரிசுத்தச் சரித்திரமதையு
மிதற்குமுன் கூறியவனைத்துஞ்
செப்புவார் காதுக்கின்புறக்கேட்பார்
சிந்தையிலெண்ணுவா ரெல்லாஞ்
சப்புவர் சனனமரண வேதனையை
சாறுக்கள் முத்தர்களென்றே
யொப்புவார்கல்ல விகபரவாழ்வி
லோங்குவா ரற்புதமாக. (49)

12வது விஷ்ணுசித்தன் கதிகொண்ட சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 242.

பிரமாண்ட புராணம் 93-வது அத்தியாயம்.

## 13வது மங்களாச் சருக்கம்.

விருத்தம்.

கராசலத்தினைக்காத்த மாலருட்புனல்கவர்ந்து
பராசக்கரப் புயலுமெனகப்பரம
வராசலத்தினிற் பெய்தெழுமழுதமாமாரி
தராதலத்தினிற்பெருகிய சாகரத்தனில். (1)



அற்பமாக்காளியதி லனுபவமுனைவரியாச்
சொற்பமாமதியாகிய யாமமிருசுருதி
விற்பனுதியர்கேசமாய் மேடைசேர்கூடல்
பற்பனுபனைப்பணிந்தவ னருளினுற்பகர்ந்தேதன். (2)

அட்டவக்கரவியூக கந்தாமுகிலார்ந்த
அட்டவங்கமாவிமானத்தின் வையமளித்தக்
கொட்டவங்கமாகடற்புவியாவுமே கொழுஞ்சீர்
கிட்டவிங்கதிர்மாமதி கிளரொளிபரவும். (3)

வைகறைத்திரிவிடத்தனில் வளர்நகரிங்க
நகருறைப்புகல்பெருமையும் நற்புனலமர்ந்தே
யாறறுகைமுறைபவ ரார்த்திமேனைக
நூற்றுநிமலமையு மற்றுமாபுகழும். (4)

இட்பாகல்வளைமா லங்காரன்றமையல்பும்
புடவிபோற்றியபுண்ணிய தீர்த்தமேசொன்னத்
தட்விசேடமுங்கேவர்கள் சகலரும்படியும்
இடமதாங்கிருதசேரு மாலாதிமையுறினும். (5)

நெதிரத்திருத்தேர் வலபவனே னுந்திருமா
அத்தமக்குணமங்களாங்கரு மினமுளதாம்
பத்திரதனிலெழுதிய மென்னியும்பகர்ந்தாம்
நித்தியம்பணிசெய்து பூசனைகணிகழ்த்தி. (6)

சுத்தமானவைகாசியின் சுக்கிலத்தொடர்பா
முத்தமந்திருத்துவாதசி தன்னிலேயுயர்ந்த
பத்தருக்குச் சரித்தவர் பாரில்வாழ்வுற்று
முத்திதன்னிலார்ந்தானதை வாழ்வினில்முயல்வார். (7)

வேறு.

பாடலார்புனைவாழும் பட்டர்கோன்பணிசெய்கின்ற
கூடல்மாலழகனென்னுங் கொண்டலோடுற்றமின்னுள்
தோடலர்வனசத்தார்ந்த சுந்தரமதுரவல்லி
கேடறுக்கரியசீர்சேர் கிரமமுந்தினைகள்யாறி. (8)

இந்திரனுலகமென்ன வெழிலுறுமதுரைதன்னில்
சந்திரகாந்தஞ்செம்பொற்ற சுவேளிந்தாதித்தர்

அந்தரங்காட்டுமட்டலங்க விமானவியூக
அந்தரராசனேறுமி சோபனத்திருவும்வாழி. (9)

மதுரைமாநகரிராசவல்லபதேவனேற்க
விதியான்மன்றுகள்போற்றும்விண்டுசித்த பாத்தரவமென்னும்
மதுராவசகத்தைநாட்டிவந்தருள் விஷ்ணுசித்தார்
சதுரமாமறையாராழ்வார் தாட்டுணையடியார்வாழி. (10)

விதியும்பார்வேலோனன்வினைதசேயாதிசேடன்
பதின்மராழ்வார்கள்கோதை பாதபங்கயமாம்தூற
றதிபனுமானந்தம்சமாதி மால்பரத்வமாக்கு
மெதிரிராமானுசன்செய் வியல்பெலாமிகவும்வாழி. (11)

மங்களமதுரைவியூகமா மேன்மதிதைமுமன்பர்
தங்கனோடர்ச்சிக்கின்ற சனக்குமாரகிவோடும்
அங்களவற்றநேம வர்ச்சகர்யிர்த்தக்கார
ரெங்கணும்புகழார்மற்றியாவருமுலகும்வாழி. (12)

வேறு.

மங்களக்கலி.

பேர்பெறும்வியாதன் சௌனகாதியர்க்குப்
பேசிய வடமொழிகொண்ட
சீர்பெறுமதுரை வியூகசுந்தரமால்
க்ஷேத்திர வைபவமதனை
யோர்பெறுங்கோயி லண்ணறுரியன்ற
விரிமையடியருளிற்றுகவிகள்
சேர்பெறுமென் றுந்திராவிடக்தாலே
சிறந்தினை வேங்கடதாசன். (13)

13-வது மங்களச்சருக்க முற்றிற்று.

ஆகச்சருக்கம் 13க்கு திருவிருத்தம் 257.

மதுரை வியூகசுந்தரராஜன் ஸ்தலபுராண சங்கிரகம்

முற்றிற்று.

ஸ்ரீ:

# ஸ்ரீ கூடலழகர் ஸ்தலபுராணம்.

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 6 | திண்டோன் | திண்டோன் |
| டை | 13 | மன்னா | மன்னர |
| டை | 9 | விமானவை | கம்சீர்ணவ |
| டை | 11 | மதுனர் | மதுரை |
| டை | 2 | சனக் | சனத் |
| 7 | 6 | செருடாம்சமான | செருடாம்சரன |
| டை | 10 | நடக்கமாய் | நடக்கமாய் |
| டை | 25 | மாசகயிநயங்க | மாசத்தியங்க |
| டை | 31 | மதுரை | மதுரை |
| டை | 7 | மாற்றக்காதி | மாற்றாக்காதி |
| 8 | 16 | பொருத்தமைமே | பொறுத்தமையே |
| டை | 7 | மதுரை | மதுரை |
| 9 | 13 | மலாத் | மலர்க் |
| டை | 5 | செந்திரு | செந்திரு |
| 11 | 15 | சோர்க்கும் | செற்றும் |
| டை | 1 | சோனசகும் | சோனாரும் |
| 12 | 3 | சௌனகாதி | சௌனகாதி |
| டை | 4 | றவத்திற் | றவத்திற் |
| டை | 12 | விசயமாயக | விசயமாய்க் |
| டை | 24 | தன்தென் | தனதென் |
| டை | 12 | தொரி | தொடு |
| 13 | 6 | ருத்திரத் | ருத்திரர் |
| 15 | 25 | பலா | பவர |
| டை | 7 | விமானபொத் | விமானப்பொத் |
| 16 | 8 | பதர்க்கு | பதற்கு |
| டை | 20 | மாட்டாங்க | மட்டாங்க |
| 17 | 24 | வெருக்ருவி | வெருக்கருசி |
| டை | 12 | முடிதது | முடித்த |
| 20 | 7 | ததிர | ததற |
| 22 | 21 | தொருமால் | தொறுமால் |
| 23 | 5 | 78 | 87 |
| 27 | 25 | குரிஞ்சி | சாதித்தி |
| 29 | 10 | செவர்க்குத் | செருக்குத் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 38 | 24 | வசதிய | வகத்திய |
| 39 | 9 | கன்னி | கண்ணி |
| டி | 24 | விறைவில் | விரைவில் |
| டி | 28 | தரிததலாலே | நரித்தலாலே |
| 42 | 24 | சாசன | சான |
| 47 | 20 | திர்ந்து | திர்ந்து |
| 48 | 13 | தவரிலா | தவறிலா |
| டி | 30 | சாத்திரம் | சாத்திரம் |
| 57 | 24 | விகெகன | விக்கென |
| 58 | 6 | சாததி | சாத்தி |
| டி | 8 | சக்திரன் | சக்திரர் |
| டி | 14 | சிறப்பாய | சிறப்பாய் |
| 59 | 24 | கைய்யவே | கையவே |
| 60 | 28 | மகிழவுற | மகிழ்வுற |
| 61 | 20 | செய்வருன் | செயவருன் |
| 63 | 24 | நானந | நானந்த |